ன் நெ. 15. விலை 2 அணா. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 23—8—53 | இதழ் 8

நீதிமன்றத்தில் தி. மு. க. குரல்

ஐவர் வழக்கில்-வாக்குமூலம்

[11-ந்தேதியன்று சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் முன்பு தி மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை, செயலாளர்கள் இரா. நெடுஞ்செழியன். கே. ஏ. மதியழகன். செயற்குழு உறுப்பினர்கள் ஈ. வெ கி. சம்பத், என். வி. நடராசன் ஆகியோர், தம்மீது சாட்டப்பட்ட குற்றங்களை மறுத்து, வாக்கு மூலங்கள் அளித்தனர். சென்றவாரம் பொதுச்செயலாளர் அண்ணாதுரை மதியழகன், ஆகிய இருவரின் வாக்குமூலங்கள் வெளிவந்தன. தொடர்ந்து, தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத், நடராசன், ஆகியோரது வாக்குமூலங்கள், கீழே தரப்படுகிறது. (ஆ—ர்)

நெடுஞ்செழியன் வாக்குமூலம்

மதிப்பிற்குரிய நீதிபதியவர்களே! திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நான், அக்கழகத்தின் பொறுப்புவாய்ந்த தலைவர்கள் நால்வருடன், தங்களின் மேன்மை தங்கிய நீதிமன்றத்தின்முன் நிறுத்தப்பட்டிருக்கும் நிலைமையை நன்குணர்கிறேன். நானும், ஏனையோர் ஈடுபட்டிருக்கும் சில நடவடிக்கைகள், இன்றைய அரசாங்கத்தின் கண்ணோட்டத்தின்படி, குற்றமுடையன என்று கருதப்படுகின்றன என்பதை, அரசாங்க வழக்கறிஞரின் வாதத்திலிருந்து அறிந்துகொண்டேன். வேற்று நாட்டவரின் அரசியல் ஆதிக்கப் பிடியிலும், பொருளாதார சுரண்டல் பிடியிலும், நாகரிகம்—பண்பாடு—மொழி ஆகியவற்றின் ஆதிக்கப் பிடியிலும் சிக்கிச் சீரழியும் ஒரு நாட்டை, அப்பிடிகளிலிருந்து விடுவிக்கவேண்டி, தூய உள்ளத்தோடு, கண்ணியப் பண்போடு, நேர்மையான வழியில், அமைதியான முறையில் என்னென்ன நடவடிக்கைகளை ஒரு விடுதலை இயக்கம் எடுக்குமோ, அவ்விதமான நடவடிக்கைகளில்தான், திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரையில் ஈடுபட்டு வந்திருக்கிறது. தாயகத்தின் விடுதலைக்குப் பாடுபட்டுவரும் எங்களை, 'விடுதலை வீரர்கள்' என்று அழைக்கவேண்டிய அரசாங்கம், 'குற்றவாளிகள்' என்று அழைக்க முன்வந்திருப்பது, நல்லறிவு படைத்தோர் அனைவருக்கும் வியப்பு உணர்ச்சியைத்தான் தரும் என்பதில் ஐயமில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகம் – ஆந்திரம் – கர்நாடகம்–கேரளம் ஆகிய திராவிடப் பகுதிகள் நான்கும் ஒன்றுபட்ட ஒரே சுதந்திர சோஷலிஸ திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியை, பலாத்காரமற்ற, அமைதியான, ஜனநாயக முறையில் அமைக்கவேண்டும் என்பதைத்தான் அரசியல் கொள்கையாகக்கொண்டிருக்கிறது.

பொருளாதாரத் துறையில் எல்லோரும் சக்திக்கு ஏற்றபடி உழைக்கவேண்டும், தேவைக்கு ஏற்றபடி வசதிகளைப் பெறவேண்டும் என்ற கொள்கையை, நிலைநாட்டவேண்டும் என்ற எண்ணத்தில் பாடுபட்டு வருகிறது.

சாதி, சமயம் காரணமாக ஏற்பட்டிருக்கும் ஏற்றத் தாழ்வுகளை அறிவுரை கூறுவதன்மூலமும், சட்டத்தின்மூலமும், அமைதியான முறையில் அறவே அகற்றி, மனிதனை மனிதன் என்று நினைக்கும் சமூக, சமத்துவ மனப்பான்மை, பொதுவாக, உலகெங்கும்—குறிப்பாக திராவிடமெங்கும் நிலவவேண்டும் என்ற சமுதாயக் கொள்கையைக் கொண்டிருக்கிறது.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில், சமுதாய ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணமாக இருந்துவரும் ஆரியப்பண்பு அகற்றப்படவேண்டும் என்பதையும், சமுதாயம் ஒன்றுபடுவதற்குக் காரணமான 'யாதும் ஊரே யாவரும்

கேளிர்' என்ற திராவிடப் பண்பு ஆதரவு பெறவேண்டும் என்பதையும், கழகம், வலியுறுத்தி வருகிறது.

வரலாற்று ஆசிரியர்கள் சாற்றும், நடைமுறைப்போக்கும்,பார்ப்பனர்களை ஆரியர்கள் என்றும், ஏனைய பார்ப்பனர் அல்லாதாரைத் திராவிடர் என்றும் மதிப்பிடச் செய்கின்றன. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாங்கள், பார்ப்பனரிடத்தே காணப்படும் ஆரியத்தையும் வெறுக்கிறோம்; பார்ப்பனரல்லாதாரிடத்தே காணப்படும் ஆரியத்தையும் வெறுக்கிறோம்.

மேற்கண்ட கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவரும் முயற்சியில், சென்ற நான்கு ஆண்டு காலமாக பலாத்காரமற்ற அமைதியான வழியைத்தான் கழகம் கடைப்பிடித்து வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம், கொலை செய்ய, கொள்ளையடிக்க, தீவைக்க, அதிகாரிகளை அடிக்க, அவர்கள் முகத்தில் திராவகத்தை ஊற்ற, தண்டவாளங்களைப்பெயர்த்தெறிய, தந்திக் கம்பிகளை அறுக்க, தபாலாபீசுகளை—கச்சேரிகளை—போலீஸ் ஸ்டேஷன்களை—ரயில்வே ஸ்டேஷன்களை நெருப்பு வைத்துக் கொளுத்த, கச்சேரி ரிகார்டுகளைப் பொசுக்க, பார்ப்பனர்களைப் பொதுப்படையாகவோ, தனிப்பட்ட முறையிலோ, பலாத்கார முறையில் தாக்க—துன்புறுத்த, திட்டங்களைத் தீட்டினதில்லை; தீட்டினோம் என்று அரசாங்கமும் ஒரு சான்றும் காட்ட இயலாது.

ஒரு விடுதலை இயக்கத்திற்குத் தேவையான அரசியல் நடவடிக்கைகளைச் சென்ற நான்கு ஆண்டுகாலத்தில் கழகம் மேற்கொண்டபோதெல்லாம், கழகத்தின் பொதுச் செயலாளர் அவர்கள், அமைதி, கட்டுப்பாடு, கண்ணியம் ஆகியவற்றைக் காப்பாற்றும்படி கழகத் தோழர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறிவுறுத்திக் கூறியும், தனிப்பட்டோர் சொத்துக்கும், பொதுச் சொத்துக்கும், இம்மி அளவு சேதமும் ஏற்படாத வகையில் நடவடிக்கைகள் நிறைவேறவேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்லியும் அறிக்கைகள் வெளியிட்டு வந்திருக்கிறார்கள். அவ்வாறே கழகத்தைச் சேர்ந்தோரின் நடவடிக்கைகள் நிகழ்ந்தேறி வந்திருக்கின்றன.

மதிப்பிற்குரிய நீதிபதி அவர்களே! தங்களின் மேன்மை தங்கிய நீதிமன்றத்தின் குற்றக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் நானும், ஏனையோரும், பள்ளிப்பருவ காலத்திலும் சரி, கல்லூரிகளில் படித்த போதும்சரி, பிறகு பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட போதும் சரி, திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்புகளைத் தாங்கியபோதும் சரி, எங்களுடைய சொற்களும், செயல்களும், அறியாமையை அகற்றவும், அறிவைப் பரப்பவும், பொய்மையை நீக்கவும், உண்மையை நிலைநாட்டவும், அலட்சியஉணர்ச்சியைப் போக்கவும், கடமை உணர்ச்சியை ஊட்டவும், அடிமை மனப்பான்மையை நீக்கவும், விடுதலை வேட்கையை வளர்க்கவும், பலாத்கார உணர்ச்சியை அடக்கவும், அமைதியை நிலைநாட்டவும் ஆன சீரிய பணிகளுக்காகச் செலவிடப்பட்டு வந்திருக்கின்றனவேயல்லாமல், மக்களின் நல்வாழ்வைக் கெடுத்தன என்றோ, சமூகத்தின் தரத்தைக் குறைத்தனவென்றோ, சுட்டிக் காட்ட யாராலும் இயலாது.

எங்களின் நோக்கத்தை மேன்மை தங்கிய நீதிபதி அவர்கள் அறிந்துகொள்வீரானால், நாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று, தீர்ப்பு அளிக்கச் சிறிது உதவியாக இருக்குமென்று கருதுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைத் தூய நோக்கம், அரசியல்—பொருளாதார—சமூகத் துறைகளில், தாயகத்திற்கு விடுதலை வாங்கித் தருவது என்பதாகும். தாயகத்தின் மூன்று துறை விடுதலைக்கான எண்ணங்களையும், செயல்களையும், பலாத்காரமற்ற, அமைதியான வழியில் தூண்டுவதை வெள்ளைக்கார அரசாங்கம், முன்பெல்லாம் இந்தியத் துணைக்கண்டத்தில் தடுத்து வந்தது. இந்திய ஆட்சியை, வெள்ளைக்காரர்கள் கையிலிருந்து, இந்தியர் கைக்கு மாற்ற காங்கிரஸ் தலைவர்கள் அந்த நாட்களில் கூறிய எண்ணங்களும், செய்த செயல்களும், தூண்டப்பட்ட குற்றங்களாக வெள்ளையர் ஆட்சியால் கருதப்பட்டபோது, காங்கிரஸ் தலைவர்கள், இப்படி அமைதியான முறையில் தூண்டுவது குற்றமாகாது என்றே வா[...]
தனர். அப்படிப்பட்ட மாபெ[...]
காங்கிரஸ்தலைவர்கள், ஆட்சிப்பீ[...]
தில் ஏறியிருப்பதால், பலாத்க[...]
மற்ற, அமைதியான விடுதலை
போராட்டத் திட்டங்களையு[...]
தூண்டுதல்களையும், வெள்ளையர்[...]
போல் குற்றமெனக் கருதமாட்ட[...]
கள் என்று நேர்மையாக எண்ணு[...]
தற்கு இடமேற்பட்டது. ஆன[...]
காங்கிரஸ் தலைவர்களைக் கொண்[...]
அரசாங்கம், காங்கிரஸ் தலைவ[...]
ராலேயே குற்றமற்றது என்[...]
வாதிடப்பட்ட செயல், குற்றமா[...]
கருதப்பட்டு, எங்கள்மீது சுமத்[...]
படுகிறது என்பதை எண்ணு[...]
போது வியப்புத்தோன்றுகிறது.

திராவிட முன்னேற்றக் கழ[...]
ஆரம்பித்துள்ள அறப்போராட்[...]
களிலே, 'டால்மியாபுரம்' எ[...]
புகைவண்டி நிலையப் பெயர்ப[...]
கையை 'கல்லக்குடி' என்ற அழ[...]
தமிழ்ப் பெயரால் மாற்ற வேண்[...]
என்பது ஒன்றாகும். டால்மியாபு[...]
என்ற பெயர், சிமிண்ட் தொழி[...]
சாலை வைக்க லைசென்ஸ் பெ[...]
வகையில் வடநாட்டு அரசி[...]
ஆதிக்கத்தின் சின்னமாகவு[...]
தோழர் டால்மியா பொருள் ச[...]
டும்வகையில் வடநாடு முதலா[...]
துவ பொருளாதாரச் சுரண்ட[...]
ஆதிக்கத்தின் அறிகுறியாகவு[...]
கல்லக்குடி என்ற தமிழ்ப் பெய[...]
டால்மியாபுரம்என்றுமாற்றி அ[...]
துள்ள வகையில் — வடநா[...]
மொழி ஆதிக்கத்தின் அறிகுறி[...]
வும் விளங்குவதால், அதனைத் [...]
விடத்தின் அவமானச் சி[...]
மென்று, திராவிட முன்னே[...]
கழகம், தன் கொள்கைக்கு ஏ[...]
நினைத்தது.

'டால்மியாபுரம்' என்ற பெய[...]
அகற்றி, அந்த புகைவண்டி நிலை[...]
தின் பெயரை 'கல்லக்குடி' என்[...]
மாற்றவேண்டும் என்று சென்[...]
ஆண்டு காலத்துக்கு மேலாக[...]
மாநாடுகளிலும், பொதுக்கூட்[...]
களிலும், கமிட்டிகளிலும், தீ[...]
மானங்கள் நிறைவேற்றி, அவ[...]
போது இந்திய அரசாங்கத்துக்[...]
ரயில்வே அதிகாரிகளுக்[...]
சென்னை அரசாங்கத்துக்[...]
அனுப்பி வைத்தோம். இப்படி[...]
நாயக முறையில கேட்டுக்கொ[...]
விருப்பத்தை, இதுவரையில், [...]
திய அரசாங்கமோ, ரயில்வே[...]

ன்னை அரசாங்கமோ பொருட்
டுத்தவில்லை. எங்கள் விருப்பத்
க்கு சாதகமாகவோ, பாதக
கவோ, ஒரு வரி பதில் எழுத
வண்டும் என்ற கண்ணியத்தையும்
ணயத்தையும், நேர்மையையும்
—, இரண்டு அரசாங்கமும்கடைப்
டிக்கவே யில்லை. பொறுத்துப்
பாறுத்துப் பார்த்தோம்; பதி
லை. சென்ற மே திங்கள் இறுதி
ல், அரக்கோணத்தில்நடைபெற்ற
மு. க. பொதுக்குழுக் கூட்டத்
ல், டால்மியாபுர போராட்டத்
தப்பற்றி தீர்மானம் ஒன்று நிறை
வற்றப்பட்டது. அதன்படி, 1953
லை 1-ம் நாளன்று, இறுதியாக
ரின் கையெழுத்திட்ட விண்ணப்
ைத, அரசாங்கங்களுக்கு
னுப்பி வைப்பதென்றும், அதி
ருந்து 15 நாட்கள்வரையில்,
லை எதிர்பார்ப்பதென்றும், பதில்
வும் எழுதாமல், அராங்கம்
ட்சியப் போக்கிலேயே இருந்து
டால், 1953, ஜூலை 15-ம்நாள்
ாழர் மு. கருணாநிதி அவர்கள்,
ாழர்கள் சிலருடன் சென்று,
ல்மியாபுரம்' என்ற பெயர்ப் பல
யின்மீது 'கல்லக்குடி' என்று
தப்பட்ட தாளை ஒட்டுவது என்
முடிவுகள் செய்யப்பட்டன.
நாயகமுறையில், நாங்கள் கடைப்
க்க இருந்த கடைசிமுறை அது
த்தான் இருந்தது. இந்தப்
ராட்டத்தில் பொதுச் செயலா
கட்டளைக்கு ஏற்ப அமைதி
பிடிக்கப்பட்டு வருகிறது.
டுத்தது, ஆரம்பக் கல்வித் திட்
எதிர்ப்பு மறியல் போராட்டத்
நோக்கத்தையும், செயலையும்,
மை தங்கிய நீதிபதி அவர்கள்
ய வேண்டுகிறேன். புதிய ஆரம்
ல்வித் திட்டத்தைப் புகுத்தும்
றையில், முதலமைச்சர் ஆச்சாரி
ஜனநாயகத்தின் அடிப்படைப்
மைப் புறக்கணித்தார் என்பது
மல்லாமல், ஜனநாயக முறை
வேண்டுகோள் விடுப்பவர்களை
லாம் கேலிமொழி பேசியும்
கிறார். புதியகல்வித் திட்டத்
புகுத்துவதற்கு ஆச்சாரியார்
விளக்க உரைகளைக் காணும்
அதான், அந்தத் திட்டத்தைப்
பல எண்ணங்களும், அச்சங்
, எங்கள் உள்ளத்தில் குடி
ண்டன. இந்த அச்சம், திட்
தைக் கொண்டுவந்த ஆச்சாரி
ரையும், அவரது மனப்பான்மை

யையும், அவரது போக்கையும் காணும்போது மிக்க அழுத்தம் பெறுகிறது. ஆச்சாரியார், பல தடவைகளில் தம்மைப் பழமை விரும்பியாகவும், வர்ணாசிரமத்தின் ஆதி நாள் ஏற்பாட்டின் புத்தி சாலித்தனத்தைப் போற்றுபவராகவும், பழைய காலத்து ரிஷிகளும், முனிவர்களும், ஜாதி முறைகள் பற்றி செய்த ஏற்பாடுகள் மிக உன்னதமானவை என்றுகூறுபவராகவும் காட்டிக்கொண்டுவந்துள்ளார். எனவேதான், அவர் புகுத்தியுள்ள புதிய திட்டம், அவர் அறிந்தோ, அறியாமலோ, அவராகச் சேர்த்துக் கொண்டதாலோ, அல்லது, அவரது இரத்தத்திலே ஊறிய தன்மையாலோ, வர்ணாச்ரமத்தை நிலை நாட்டுவதாக அமைந்துவிட்டது என்று எண்ணவேண்டி வந்தது. நாட்டின் எதிர்கால நலனையும் வீழ்ச்சியுற்ற திராவிடப் பெருங்குடி மக்கள் நலனையும் காப்பாற்ற, புதிய திட்டத்தை எதிர்க்கவேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்பட்டது. எனவேதான், புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் கைவிடும்படி நாங்கள் சென்ற இரண்டு மாத கால மாகத் தீர்மானம் மூலம் கேட்டுக் கொண்டோம் எங்களைப்போலவே, கல்வி நிபுணர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், இடதுசாரிக் கட்சிகள், காங்கிரசிலே உள்ள வேறு பல தலைவர்கள் ஆகியோர் கேட்டுக் கொண்டார்கள். 1953-ம் ஆண்டு ஜூன் திங்கள் 21-ம் நாள் திராவிட முன்னேற்றக் கழகக்கிளைகள் சார்பில் ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, ஆச்சாரியாருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. ஆச்சாரியார் அரசாங்கம் ஒரு வரியிலாவது பதில் தெரிவிக்கும் கண்ணியத்தைப் பெறவில்லை. இதுவரை எதிர்பார்க்காத முறையில் நாலா பக்கத்திலிருந்தும், பெருவாரியான வகையினரிடமிருந்தும் எதிர்ப்புக் குரல் எழும்பியும், ஆச்சாரியார் தம் ஆணவப் போக்கால், அவை அனைத்தையும் புறக்கணித்தார். புறக்கணித்தது மட்டுமல்லாமல், 'புத்தரும், ஏசுவும், சங்கரரும், மக்களைக் கேட்டுக்கொண்டா செய்தார்கள், நான் செய்ய?' என்றும் 'என்னுடைய கல்வித் திட்டம் பிடிக்காவிட்டால், நான் இறந்த பிறகு என்னுடைய கல்லறையின்மீது எதிர்கால மாபினர்கள் பண்ணை வாரி இறைக்கட்டும்; காரி உமிழட்டும்,' என்றும், 'என்னைக் கேட்டால், படிப்பே மனிதனுக்கு அவசியமில்லை என்பேன்' என்றும், 'அசோகனும், அக்பரும், ஐதர் அலியும் படிக்கவா செய்தார்கள்; அவர்களெல்லாம் படிக்காமல் நாடாளவில்லையா?' என்றும், 'ஆரம்பப் பள்ளிகளையே மூடிவிட்டால்கூட நல்லது என்று கருதுகிறேன்' என்றும், 'நான் 50-வருட காலமாக யோசித்துவரும் திட்டம்' என்றும், 'என்னை எதிர்ப்பவர்கள் பித்தலாட்டக்காரர்கள்' என்றும், 'யார் என்ன சொன்னாலும் நான் கவலைப்படப்போவதில்லை' என்றும் 'மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைப்பற்றி கவலைப்பட அவசியமில்லை' என்றும்—இப்படியாக, பல மொழிகள் புகன்று, தாமே நினைத்த திட்டத்தை, தாமாகவே புகுத்திவிட்டார். பொதுக் கூட்டங்கள்—மாநாடுகள் கூட்டி, பேச்சு மூலமும், தீர்மானம் மூலமும், பத்திரிகைகளில் எழுத்து மூலமும் கேட்டுக்கொண்ட பிறகும், யாதொன்றையும் பொருட்படுத்தாமல், ஆச்சாரியார், திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து விட்டார். பிடிவாதமாகத் திட்டத்தைப் புகுத்தும் ஆச்சாரியாரைத் திருத்த, வேறு வழியில்லாமல், மறியல் என்ற சட்டத்திற்கு உட்பட்ட பிடிவாத முறையின் மூலமாகத் திருத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மறியல், சட்டப்படி கொடுக்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமை. எனவேதான், முதலமைச்சர், சட்ட மன்றம் துவக்கும் நாளான 14—7—53-ம் நாள், அவர் சட்டசபைக்குச்செல்லுமுன், அவர் வீட்டிற்குச் சென்று, கல்வித் திட்டத்தைப் புகுத்துவதை நிறுத்தும்படி, பலாத்காரமற்ற, அமைதியான மறியல் மூலம் கேட்டு, அவர் இணக்கம் பெறுவது என்று திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானித்தது.

தோழர் சம்பத்து அவர்கள் முன்மாதிரியாகச் சென்று மறியல் செய்வதன் மூலம், பலர், அந்த மறியல் முறையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டதோடு, அந்த வகையில், தோழர் சம்பத் அவர்கள் தலைமை

(13-ம் பக்கம் பார்க்க)

அந்த மூன்று அற்புதங்கள்

[அடிகள்]

★

யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

அடுத்தடுத்து மூன்று அற்புதங்கள், ஒரே சமயத்தில், ஒரே இடத்தில் நிகழும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

அதிலும், சுதந்திர தின விழாக் கொண்டாடும் சமயத்தில், இப்படி மூன்று அற்புதங்கள் நிகழும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

மட்டற்ற மகிழ்ச்சிப் பெருக்கால் கொண்டாடப்படும் சுதந்தர தின விழாவின் போது, மகிழ்ச்சியின் எல்லையையும் மீறச் செய்யும் மூன்று அற்புதங்கள் நிகழும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

அண்மையில் நடைபெற்ற ஆறாவது சுதந்தர தின விழாவின் போது மூன்று அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.

டில்லியில் நடைபெற்ற சுதந்தர தின விழா, பண்டித நேரு அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

பண்டித நேரு அவர்களின் சுதந்தர முழக்கத்தைக் கேட்டானந்திக்க அரைலட்சம் மக்கள் குழுமியிருந்தனர்.

அந்த 50,000 மக்கள் முன்னிலையில்தான் அந்த மூன்று அற்புதங்களும் நிகழ்ந்துள்ளன.

அந்த மூன்று அற்புதங்களில், பண்டித நேரு அவர்களின் கவனத்தை, ஒரே ஒரு அற்புதம் தான் இழுத்திருக்கிறது. மற்ற இரண்டு அற்புதங்களும் பொது மக்களின் கவனத்தை இழுக்க வேண்டியவை.

அந்த அற்புதம் அவருடைய கவனத்தை இழுத்தது மட்டுமல்ல, அவரால் தாங்க முடியாத பேரிடியையும் கொடுத்திருக்கிறது.

பண்டித நேரு இயற்கையாகவே முன்கோபக்காரர் என்றபோதிலும், கோபம் என்ற குறியே ஏற்பட வேண்டிய சந்தர்ப்பம் உண்டாகாத நிலையில், அதாவது சந்தோஷத்தின் அறிகுறியாகக் கொண்டாடப்பட்ட சுதந்தரதின விழாவில், அவருக்குக் கோபம் கொந்தளித்து எழுந்ததென்றால், அது, அவருடைய இயற்கையான முன்கோபத்தின் காரணமாக எழுந்த கொந்தளிப்பென்று சொல்லிவிட முடியாது.

ஆனந்தசாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் நேரத்தில், முன்கோபம், எந்தக் காரணத்தைக்கொண்டும் ஏற்படாது—ஏற்படும்படியான சம்பவங்களும் நிகழாது — மீறி நிகழ்ந்தாலும், அந்தச் சம்பவம் முன்கோபத்தைக் கிளறிவிடுவதாக ஆகாது. ஒரு அடிப்படையான உண்மையை வெளிப்படுத்துவதாகவும், அதன் காரணமாகச் சம்பந்தப்பட்ட சிலருக்குமட்டும் அணைக்கமுடியாத நெருப்புப்போன்ற கோபமாகவுமே அந்தச் சம்பவம் இருக்கும்.

பண்டிதநேரு அவர்களுக்கு ஏற்பட்ட கோபம் சாதாரணமான முன்கோபமல்ல. பஞ்சிலேபடும் நெருப்புப்போல் திடீரென்று உண்டானதல்ல. பச்சை மரத்தையே பஸ்மீகரமாக்கவல்ல தீயைப்போன்றது. எண்ணி எண்ணி, விம்மி, விம்மி அழவேண்டிய ஒரு சம்பவம், அவரை, அடக்கமுடியாத கோபத்துக்கு ஆளாகும்படி செய்துவிட்டது.

என்ன சம்பவம் என்று கேட்கிறீர்களா? சுதந்தர தினவிழாவிலே துக்கப்படக்கூடிய சம்பவம் என்ன நடந்திருக்க முடியும் என்று எவருக்கும்தான் கேட்கத் தோன்றும். ஆனால் அந்தச் சம்பவம், பண்டிதருக்குப் பதட்டத்தை உண்டாக்கியதோடு, அவருடைய நெஞ்சு பதறும்படியும் செய்துவிட்டது.

சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தின் முடிவில், பண்டித நேரு, அங்கு குழுமியிருந்த அரை லட்சம் மக்களை நோக்கி, "ஜெய் ஹிந்த்" என்று ஒலிக்கும்படி கேட்டார்.

ஒரு முறை கேட்டார்—
திருப்தி ஏற்படவில்லை

இரண்டாந்தடவை கேட்டார்
—திருப்தி அளிக்கவில்லை.

மூன்றும் முறை உரத்த [குர]லில் ஒலிக்கும்படி கேட்டா[ர்]. ஒலித்தனர்—இடிமுழக்கம்போ[ல] இரைந்து ஒலித்தனர்.

The speech ended. M[r.] Nehru called for "Jai Hin[d]" once, twice. The vast aud[i]ance repeated the slogan but Mr. Nehru was not sati[s]fied and called for a mo[re] vigorous repeat for the thi[rd] time and the people respond[ed] with a thunderous 'Jai Hi[nd]'

என்பது, நாம் மேலே தந்து[ள்ள] தமிழ் வாசகங்களின் நேர[டி] மொழி பெயர்ப்பு — 17—8—[..] 'இந்து' பத்திரிகையில் இருப்ப[து].

நடைபெற்றதோ சுதந்தர [தின] விழா! பண்டித நேரு கேட்ட[து] "ஜெய் ஹிந்த்" ஒலிக்கும்ப[டி]. ஆனால், மக்களோ பண்டிதர் வேண்டுகோளை, அவர் திருப்[தி] படும் வகையில் நிறைவேற்ற[...] வில்லை ஒரு முறை கேட்டார், [ம]க்கள் செவிசாய்க்கவில்லை. மறுமு[றை] கேட்டார், அதே பல்லவி[...] மூன்றும் முறை கேட்டார், [கொ]தளிக்கும் கோபத்தோடு. [அ]போது தான் பண்டிதர் திருப்[தி] படும் வகையில் "ஜெய் ஹி[ந்த்]" என்ற ஒலியைக் கொட்டின[ர்]. இது பத்திரிகைச்செய்தி. காங்[கிரஸ்] சர்க்காரைக் கண்ணை மூடிக்கொ[ண்டு] ஆதரிக்கும் பத்திரிகைகளே இ[ந்த] அளவுக்கு அந்தச் செய்தி[யை] வெளியிட்டுள்ளன என்றால், [அந்]தச் சம்பவம் எப்படி நடந்திரு[க்கும்] என்பதை யூகித்துப் பார்க்[கத்] தேவையில்லை.

Once
Twice
ஒரு முறை!
இரண்டுமுறை
Not satisfied
திருப்தி ஏற்படவில்லை!
Third time.
மூன்றாந் தடவை!
Called for vigorous repe[at]
உரத்து ஒலிக்கும்படி கேட்[டார்]
People responded
மக்கள் திருப்திப்படுத்தி[னர்]

ன் இந்த நிலை ஏற்பட்டது? எண்ணிப் பார்க்க வேண்டாமா? "ஜெய் ஹிந்த்" ஒலிக்க விரும்பாத மக்களா அங்கு கூடியிருந்தனர்? டநாட்டு ஆதிக்கத்தை வெறுப்பவர்களா? இந்தி எதிர்ப்பாளர்களா? திராவிடத்திலிருந்து சென்றவர்களா? ரஷ்யாவிலிருந்து வந்தவர்களா? அங்கு குழுமியிருந்த 50000 (பத்திரிகைக் கணக்குப்படி) மக்கள் யார்—எந்தக் கட்சியைச்சேர்ந்தவர்கள்? சுதந்திரதின விழாவில் கலந்துகொண்டவர்கள் யாராய் இருக்கலாம்? திராவிட இயக்கத்தவரா? கம்யூனிஸ்ட் கட்சியினரா? வேறு பிறரா?

காங்கிரஸ்காரர்களும், அவர்களின் அனுதாபிகளும்தானே அந்த அரை லட்சம் மக்களில் பெரும் பகுதியினராக இருந்திருக்க முடியும். ஒரு சிலர் வேடிக்கை பார்க்க வந்த வேற்றுட்கள் என்று வைத்துக்கொண்டாலும் நூற்றுக்கு எழுபத்தைந்து பேராவது சுதந்திர சர்க்காரை ஆதரிப்பவர்களாகத்தானே இருந்திருப்பர். அப்படி இருந்தும் "ஜெய் ஹிந்த்" ஒலி எழுப்ப ஏன் தயங்கினர்? அந்த ஒலி கேட்டுப் பழக்கப்படாத மக்களா அவர்கள்? ஏன் ஒரு முறை! இரண்டு முறை! மூன்று முறை என்று ஏலம்போடுமளவுக்கு நிலைமை ஏற்பட்டது? 'ஜெய்ஹிந்த்' என்ற காங்கிரசின் மூலமந்திரம்—காங்கிரஸ்காரர்களின் மூச்சோடு கலந்திருக்கவேண்டிய ஒரு வாக்கியம், அப்படிப்பட்ட ஒன்றை ஒலிக்கும்படி, மூன்று முறை, மூச்சைப் பிடித்துக்கொண்டு கேட்கவேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது? அந்த வாக்கியத்தை ஒலிக்கும்படி கேட்டுக்கொண்டவர் சாதாரண ஆசாமியா? கட்சியின் அறிமுகமில்லாதவரா? தலைமைச்சர்-காங்கிரஸ் தலைவர்—இந்தியாவின் பிரதமமந்திரி—பண்டித நேருவன்றோ கேட்டுக்கொண்டார்! ஏன் அவருடைய வேண்டுகோள் அலட்சியப்படுத்தப்பட்டது? எண்ணிப் பார்க்க வேண்டாமா? எண்ணிப் பார்ப்பது தவறா? எண்ணிப் பார்க்கும்படி கேட்பது கொடுமையா? சிந்தியுங்கள் தேசிய நண்பர்களே! "ஜெய் ஹிந்த்" அன்பர்களே!!

"ஜெய் ஹிந்த்" ஒலிக்கும்படி முதல் முறை கேட்டவர் நாட்டின் பிரதமர் என்ற காரணத்தால் மக்கள் அவருடைய வேண்டுகோளை மதிக்கவில்லை. இரண்டாந்தடவை கேட்டவர் காங்கிரசின் அக்ராசனர் என்ற காரணத்தால் செவிசாய்க்கவில்லை. மூன்றாந்தடவை கேட்டவர் பண்டித ஜவகர்லால் நேரு என்ற காரணத்தால் அவருடைய வேண்டுகோளுக்கு மதிப்புக் கொடுத்தனர் மக்கள்—பண்டித மோதிலால் நேருவின் புதல்வர் வேண்டிக் கொள்கிறார் என்ற காரணத்தால், தனிப்பட்ட முறையில் அவரை உற்சாகப் படுத்தினர். நாட்டின் பிரதமரையோ, காங்கிரசின் தலைவரையோ மக்கள் மதிக்கவில்லை—மதிக்கும்படி அவர் நடந்துகொள்ளவில்லை! வாழ்வளிக்க வந்தவர், எங்களை வகையும் படியான நிலையில் வைத்துவிட்டாரே என்ற வேதனை மக்களை வாட்டிக்கொண்டு இருக்கும் நேரத்திலும் கூட, பழைய பாசத்தின் காரணமாக அவருக்கு மதிப்புக் கொடுத்தனர் மக்கள் என்றால், அதனை ஒரு அற்புதம் என்றுதானே கூற வேண்டும்.

வாழ்விழந்து நிற்கும் மக்கள் மத்தியில் வாழ்த்தொலி எழுப்பும் நோக்கத்தோடு ஒருவர் வந்து நிற்கிறார் என்றால், அதனை ஒரு அற்புதம் என்று கூறாமல் வேறெப்படிக் கூறுவது?

ஆறாண்டுகளாக அவதிப்பட்டுக் கிடக்கும் மக்களிடையே ஆனந்த கீதம் பாட ஒருவர் தைரியமாகவந்து நிற்கிறார் என்றால், அதனை ஒரு அற்புதம் என்று யார்தான் கூறமாட்டார்கள்?

மூன்று அற்புதங்களில் ஒன்று இது மற்ற இரண்டு என்ன என்று அறிய ஆவலாயிருப்பீர்கள். அவை, "ஜெய் ஹிந்த்" அளவு ஒன்றும் பிரமாதமாக இல்லை என்ற போதிலும், அற்புதங்களின் பட்டியலில் இடம் பெற முடியாதவை என்று கூறித் தள்ளிவிட முடியாது.

டில்லியில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவின்போது, உலக சமாதானத்தைப்பற்றியும் பண்டிதநேரு பேசியிருக்கிறார்.

"உலகில் சமாதானத்தைப் பாதுகாக்க இந்தியா உறுதி பூண்டிருக்கிறது"

என்று அவர் குறிப்பிட்டுப் பேசுகையில், நடைபெற்றதாகக் கூறப்படும் ஒரு சம்பவம் இருக்கிறதே! அதுதான், இரண்டாவது அற்புதமாக இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது.

"உலகில் சமாதானத்தை நிலைநிறுத்த இந்தியாவுக்குள்ள ஆர்வம் பற்றி நேருஜி குறிப்பிட்டுப் பேசிக்கொண்டிருந்த சமயம், ஒரே ஒரு புறாமட்டும் அவரது தலைக்கு நேராக மேலே சிறகை அடித்துக்கொண்டு சென்றது."

என்று ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது. அந்தச் சம்பவத்தைச் சாதாரண செய்தியாக வெளியிடவில்லை. அப்படி வெளியிட்டிருந்தால் அதுபற்றி எழுதவேண்டிய நிலைமையே ஏற்பட்டிராது. ஏதாவதொரு முக்கியமான செய்தியை ஒரு பத்திரிகை எப்படி வெளியிடுமோ, அந்த முறையில் அச்சம்பவத்திற்கு முக்யத்வம் கொடுத்து வெளியிடப்பட்டிருக்கிறது. பண்டித நேரு அவர்களின் பேச்சின் ஒரு பகுதியாக அது இருந்தும், அதை அவரது பேச்சுடன் சம்பந்தப்படுத்தாமல், தனிச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது. "நேரு தலைமேல் பறந்த புறா"— "சமாதானம்பற்றிப் பேசுகையில் வட்டமிட்டது" என்ற தலைப்புகளோடு, அந்தச் செய்தியைத் தனியாக வெளியிட்டிருக்கிறது.

உலக சமாதானத்துக்கும் நேருவின் தலைக்குமேல் புறா பறந்ததற்கும் என்ன சம்பந்தம் என்பது தெரியவில்லை. புறா—சமாதானத்தின் அறிகுறியா? சமாதானத்தை விரும்புகிறவர்கள் புறாவைத் தூதனுப்புவதாகக் கூறப்படுவதை ஆதாரமாகவைத்து, இச்செய்திக்கு முக்யத்துவம் கொடுக்கப்பட்டதென்று சிலர் நினைக்கலாம். ஆனால், அப்படி நினைப்பது காலங்கடந்த ஒன்றாகும். புறா போன்ற பறவைகளைத் தூதனுப்புவதென்ற முறை ஒரு காலத்தில் இருந்ததாகக் கூறப்பட்டபோதிலும், அந்த முறை சமாதானத்துக்காகமட்டும் கையாளப்படுவதில்லை என்பது ஜப்பானியரின் சண்டைக் காலத்தில் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு உண்மையாகும். ஜப்பானியர் சைனாமீது போர் தொடுத்து — சிங்கப்பூரைச் 'சோணன்' ஆக்கிச் சோணகிரிகளானபோது, சமாதானத்தைக் குலைக்கும் காரியத்தைப் புறாக்களைத் தூதனுப்புவதன் வாயிலாக தப்பா

ணியர் செய்தனர் என்ற செய்தியை யாரும் இதற்குள் மறந்திருக்கமுடியாது. எனவே, புறாக்கள் சமாதானத்துக்காகமட்டும் பணிபுரியும் பக்குவம் பெற்ற பறவைகள் அல்ல என்பதும், பழக்கப்படுத்தப்பட்ட எதனையுமே அவை செய்யக் கூடியவை என்பதும் தெரிந்து கொள்ளவேண்டிய தொன்றல்ல என்ற போதிலும், தெரிவித்து வைக்க வேண்டிய ஒன்றாகிவிடும் அளவுக்குச் சிலர் தங்களுடைய மேதாவித்தனத்தைக் காட்ட முன்வந்து விடுகின்றனரே என்பதை நினைக்கும் போதுதான், நமக்கு அப்படிப் பட்டவர்களைப் பார்த்தால் ஆச்சரியமும் ஆத்திரமும் கலந்த பரிதாபம் உண்டாகிறது.

நளன் வீட்டுப் புறா (அன்னம்) தமயந்தி வீட்டுக்குத் தூது சென்றதாகக் கூறப்படும் கதையை நம்பும் அன்பர்கள், சமாதானத்துக்காக மட்டுமே புறா பணியாற்றுகிறதென்பதனை எப்படி ஒப்புக்கொள்கின்றனர் என்பதுதான் எம்மால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாய் இருக்கிறது. புறாவின் தூதால் கணவனும் மனைவியுமான நிலையைப் பெற்ற நளனும் தமயந்தியும் சமாதானமாக வாழ முடிந்ததா? நளச்சக்ரவர்த்தியின் கதையைப்படிக்கும்—நம்பும் எவரும் புறாவை ஒரு சமாதானப் பணிபுரியும் பறவை என்றுபாராட்டுவர்? நளச்சக்கரவர்த்தி கதையைப் படிப்பவர் சபிப்பர். நைடதத்தைப் படிப்பவர் எள்ளி நகையாடுவர். புறா—சமாதானத்தின் அறிகுறி என்று சொல்லப்படும் புத்திசாலித்தனத்தைப் புத்துணர்ச்சி பெற்ற எவருமே ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

அதிலும் உள் நாட்டில் ஏற்பட்டுள்ள பலதிறப்பட்ட குழறல்களுக்குச் சமாதானம் காண முடியாத ஒருவர், வெளியுலகச் சமாதானத்துக்காகச் சதாசர்வகாலமும் பாடுபடுவதாக உறுதி கூறிய சமயத்தில், ஒரு புறா, அவருடைய தலைக்கு மேலே சிறகடித்துக் கொண்டு சென்றதென்றால், அது, அவ்வளவு வேடிக்கையும், வேதனையும் கலந்த சம்பவமாகும்!

இந்த உபகண்டத்தின் வட கோடியான காஷ்மீரிலே கலகமும் கொந்தளிப்பும்! தென்கோடியான திராவிடத்திலே திடுக்கிடும் கோரச்சம்பவங்கள்! காஷ்மீரிலே பத்துப் பேருக்குமேல் துப்பாக்கிக்கு இரையானார்கள் என்றால், தூத்துக்குடியிலும் கல்லக்குடியிலும் பத்துப் பேருக்குமேல் சர்க்காரின் துப்பாக்கிக்கு இரையாகிவிட்டனர்! இது சமாதான வாழ்வின் அறிகுறியா? வேலையிலலாக் கொடுமையால் வீதி வீதியாகச் சுற்றித் திரியும் லட்சக்கணக்கான மக்களின் அவதிக்குரலைக் கேட்டுக் கொண்டபடியே, வெளியுலகின் வேதனையைப் போக்கப் பாடுபடுவதாக வீராப்புப் பேசுவதுதான் சமாதானத்தின் அறிகுறியா?

இங்கே, பசி! பசி!! என்று பதைக்கும் மக்கள் ஒருபுறம் — வேலை! வேலை!! என்று வேதனைக் குரல் கிளப்பும் மக்கள் இன்னொரு பக்கம் —உரிமை! உரிமை!! என்று உணர்ச்சி வசப்பட்ட மக்களின் கிளர்ச்சிகள் மற்றொரு திக்கில் — இப்படி எப்பக்கம் நோக்கினும் சமாதானம் என்ற வாடையே வீசாத சம்பவங்கள் நடக்கும் நிலைமையை உண்டாக்கிவிட்டிருக்கும் ஒரு சர்க்கார், ஆதிக்கவெறியால் ஆயுதப்பணிகளைக் காட்சியளிக்கும் வெளியுலகைச் சமாதானப்படுத்தி வைக்கப் படாத பாடு படுகிறதாம்! இங்கிருந்து சமாதானத்தை நிலைநாட்டப் படைவரிசை ஒன்றை அனுப்புகிறதாம்! அதற்கு நேருவும், ஆச்சாரியாரும் ஆசி கூறி அனுப்புகின்றனராம்! இது எவ்வளவு வேதனை தரக் கூடிய கேலிக்கூத்தான சம்பவம்!

காஷ்மீரைக் கடைசிவரை காப்பதே எங்கள் கடமையென்று கூறுவதும், பின்னர் தங்கள் விவகாரங்களைக் காஷ்மீர் மக்கள்தான் முடிவு செய்து கொள்ள வேண்டுமென்று கூறுவதும் தான் சமாதானத்துக்கு வழிகோலும் திட்டமா? நேற்று வரை, 'எனது சகோதரன்'' என்று நேரு அவர்களால் பாசத்தோடு பாராட்டப்பட்ட ஷேக் அப்துல்லா இன்று சிறையில் கிடக்கிறாரே, உம்முடைய அபிப்பிராயம் என்ன என்று நேருவைக் கேட்டால், அது காஷ்மீரைப் பற்றிய உள்நாட்டு விவகாரமென்றும், தாம் அதுபற்றி ஒன்றும் கூறுவதற்கில்லை என்றும் சாமர்த்தியமாகப் பேசுபவர் தான் உலக சமாதானத்துக்காக உழைப்பதே 'என் கடமை' என்று உபதேசம் செய்கிறார். இப்படிப்பட்ட உபதேசகர்த்தாக்கள் உலக சமாதான[illegible] பற்றி வீர உரை ஆற்றிக் கொண்[illegible]ருந்த போது உயரப் பறந்த[illegible] ஒரு புறா! அது சமாதானத்[illegible] அறிகுறியாம்!

இப்படிப்பட்ட ஒரு சம்பவத்[illegible] அற்புதம் என்ற பெயரால் அ[illegible] காமல வேறு எப்படி அழைப[illegible]தென்று தெரியவில்லை. உட்[illegible] இடிந்து கொண்டிருக்கிறது; [illegible] கவனியாமல வெளிச்சுவரைப் [illegible] அழகுபடுத்த முயற்சிக்கும் [illegible] 'திறமை'யை அற்புதம் என்[illegible] தானே கூறவேண்டும்!

சுருக்கமாகக் கூறி முடித்து[illegible]லாம் என்று தொடங்கப்பட்[illegible] ஒன்று, நீண்டுகொண்டே போ[illegible]தென்றபோதிலும், எடுத்[illegible] கொண்ட பொருளை இயன்ற[illegible] சுருக்கமாகவாவது கூறித்[illegible] முடிக்கவேண்டும்.

மூன்றாவது அற்புதம் என்[illegible] வென்றால், பண்டித நேரு அவ[illegible] கோட்டை மதில்மீதேறித் தே[illegible] கொடியை ஏற்றி வைத்தவு[illegible] பீரங்கிகள் 31 குண்டுகளைப்பொ[illegible]தனவாம்.

"பீரங்கி முழக்கம் கே[illegible] வுடன் கோட்டைத் துவா[illegible] களில் இருந்த பல புறா[illegible] வெண்ணிறச் சிறகுகளை அ[illegible] துக்கொண்டு பறந்து சென்ற[illegible] என்றும் அந்தச் செய்திகூறுகி[illegible] பீரங்கியின் வேட்டுச்சத்தம் கே[illegible] வுடனே கோட்டையின் துவா[illegible] களிலிருந்த வெண்ணிறப் புறா[illegible] எல்லாம் வெளியே பறந்து சென்[illegible] வாம். இது ஒரு அற்புதமா[illegible] கள் இதனை ஒரு அதிசயமாகக்[illegible] வேண்டுமென்று எண்ணத்து[illegible] அந்தச் செய்திக்கு அளவுக்கு[illegible] சிய முக்கியத்துவம் கொடுத்து[illegible] யிட்டிருக்கிறது அந்தப்பத்தி[illegible] பீரங்கிச் சத்தம் கேட்டவு[illegible] பீதி அடைந்து தட பித்துக்கொ[illegible] முயற்சிப்பது பறவைகள் மட்டுமா[illegible] உயிருள்ள எல்லாமே அல்லது[illegible] லோருமே பனிதவர்க்கும் [illegible] உள்ளத்தில் ஏற்படும் உதறல்[illegible] வேட்டுத் தங்கள்மீது பா[illegible] விடுமோ என்ற பயத்தின் கா[illegible]மாக எங்காவது பதுங்கவே [illegible] சிப்பர். போர் முனையில் [illegible] ரோரும், பொறுப்புவாய்ந்த [illegible] கைக்காக உயிரைப் பணயம் [illegible]

ப்போரிடுவோரும் மட்டுமே எப்பட்ட வெடிகுண்டுக்கும் அடிலிருந்து அஞ்சி ஓடிவிடமாட்டார். அவர்களுக்கு, போரில் வெற்றி பெறவேண்டுமென்ற நோக்கமும், கொள்கை நிறைவேற்றப்பட வேண்டுமென்பதில் ஒரே உறுதியும் தவிர, வேறொன்றும் அவர்கள் உள்ளத்தில் இடம் பெறா. ஏனைய சலசலப்பாளர்கள் எல்லோரும் சாதாரண வெற்றுவேட்டைக் கேட்டால்கூட தலைதெறிக்கத் தப்பித்துக்கொள்ளவே முயல்வர்.

சுதந்திர தினத்தன்று டில்லியில் பறக்கவிடப்பட்ட நூப்பத்தொரு குண்டு முழக்கங்களும் சுதந்திரம் பெற்ற மகிழ்ச்சியின் விளைவாக—மக்களின் மனதைக் குளிரவைக்கும் நிகழ்ச்சியாகப் பிரதிபலிக்கும் செய்யப்பட்டன. ஆனால், அந்தக் கோட்டைக்குள் குடியிருக்கும் புறாக்களை மட்டும் அந்த வேட்டொலிகள் குளிரவைக்கவில்லை—குமுறும்படியே செய்தன. தங்கள் உயிருக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற அச்சத்தால் அலறித்துடித்துப் பறந்தோடின. சாதாரண வேடன் கையிலிருக்கும் துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டாலே பறவைகள் பதறிப்பறந்து மறையும் இயல்புடையனவென்றால், பீரங்கியில் இருந்து கிளம்பும் இடிமுழக்கம்போன்ற சத்தத்தைக்கேட்ட பின் சாந்த சொரூபிகளாகவா இருக்க முடியும்? வேட்டுச் சத்தம் கேட்டுப் பறவைகள் பறந்து சென்றன என்பதை ஏன் பிரமாதப்படுத்திப் பிரசுரிக்க வேண்டுமென்பதுதான் தெரியவில்லை.

16—8—53ல் வெளிவந்த 'தினமணி'யை எடுத்துப் பாருங்கள்; இங்கு குறிப்பிட்டிருக்கும் மூன்று 'அற்புதங்'களுக்கும் எவ்வளவு முக்கியத்வம் கொடுத்து வெளியிடப்பட்டிருக்கிறதென்பது தெரியும்.

சுதந்திரம் கிடைத்தபின் நாட்டில் ஏற்பட்ட—ஏற்படுத்தப்பட்ட சோக சம்பவங்களை மறைக்கக் கையாளப்படும் முறைகளில் — சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்றென்பதைத் தவிர இப்படிப்பட்ட சாதாரண சம்பவங்களுக்கு, அவசியமற்ற — அர்த்தமற்ற 'அற்புதம்' கற்பித்து விளம்பரப்படுத்துவதன் நோக்கம் வேறு என்னவாக இருக்கமுடியும்? விவேகமுள்ளவர்கள் இப்படிப்பட்ட விளம்பரங்களைக் கண்டு விலாப்புடைக்க நகைப்பரேயன்றி அவர்களின் 'விசாலமான புத்திசாலி'த்தனத்தைக்கண்டு புளகாங்கிதமா அடைவர்?

தூத்துக்குடி

ஆட்சியாளர் பூட்டி வைக்கப்பட்டிருக்கும் கழக வீரர்கள் தங்கப்பழம், சிவசாமி நடராசன், கே. வி. கே. சாமி, ரத்னம் ஆகியோர் உள்ளிட்ட 107 அறப்போர் வீரர்களும், இன்னும் சிறைக்குள் கிடக்கின்றனர். அவர்களை உள்ளேபூட்டிவிட்டு, கொடூரமான குற்றங்களைச் சாட்டு, பழி வாங்கமுயல்கிறது, சர்க்காரியார், அரசாங்கம். ஐயோ, தங்களே! அடுக்குமா, இது?

'மூஸாதீக்'—வீழ்ச்சி!

மன்னன் மருண்டான்!

எதிரிகள் மிரண்டனர்!

'வீராதி, வீரர்' — என்றனர் மக்கள்.

பன்சிரிப்பு கண்டதும்—கட்டளைகள் நிறைவேற்றப்பட்டன!

முதியவர், அவர்!

முடிசூடி — ஓடினான், நாட்டை விட்டு!

•

பாரசீக பூமியிலே, மூஸாதீக் பொற்றிருந்த பலர், சாதாரணமானதல்ல. நேற்றுவரை, 'தெஹ்ரான்' நகரிலிருந்த அவரது குரல், ஜகமெங்கும் கேட்டது. சிம்மம் போல், உலவினார், அந்தீரர். ஆனால், இன்றோ!

•

தோழன் பாதமி — துணைநின்ற அமைச்சன் — துண்டு துண்டாக வெட்டியெறியப்பட்டான்.

மூஸாதீக்கின் மாளிகை, எதிரிகளால் வளைத்துக் கொள்ளப்பட்டது.

ஓடிய மன்னன் திரும்புகிறான்.

முதுகிழவர், தப்பி ஓடுகிறார்!

எதிரி ஜாஹேதி, விடும் செய்திகளை, தெஹ்ரான் ஒலி பரப்புகிறது.

மூஸாதீக்—நேற்று அரசுத் தலைவர்.

மூன்று நாட்களுக்கு முன் மணிமுடி அணிந்தவன், ஓடுவதைக் காண மகிழ்ந்தவர்.

இன்று, இவர், ஓட — அவன், மகிழ்கிறான்!

•

உரிமை முழக்கம், செவிக்கினிய கீதம். விடுதலை விரும்பிகளுக்கு, அக்கீதத்தைக் காட்டித்தான், ஆங்கிலேயப் பிடியிலிருந்த, பாரசீகப் பூமியை, மீட்டார், மூஸாதீக். எண்ணெய்வளம் குலுங்கும், அந்தச் சிங்காரப் பூமியை வெளிநாட்டாதிக்கத்திலிருந்து மீட்டு வெற்றி மாலை சூடிய மூஸாதீக்—ஓர், வெற்றிவீரர். எனவே, மக்களின் வாழ்த்து மாலைகளைப் பெறும் அருகதை பெற்றார். 'வருக, தலைவா!', என்று, மக்கள் வாயார வாழ்த்தினால்—அந்த மக்களை மருட்டி மமதையுடன் வாழ நினைப்பவன், மருள்வதுதானே வழக்கம்?—அந்த மருட்சிக்கு இரையான பாரசீக 'ஷா', மூஸாதீக்கைக் கண்டு, மிரட்சியடைந்தான். அதிலும், மூஸாதீக், சிறிது முன்னேற்றக் கொள்கையுடன், நாட்டுக்கான சிலபல நல்ல காரியங்களைச் செய்ய முனைந்தார். பதவியிலமர்ந்ததும், வெள்ளையன் ஆதிக்கத்துக்குச் சாவு மணி அடித்த அவர், அமெரிக்க ஆதிக்கத்தின் பக்கம் தலைசாய்க்கவும் மறுத்தார். 'என் பூமியில் எவருக்கும் இடமில்லை. ஈரான், ஈரானியருக்கே!', என்று முழக்கமிட்டார். இந்த இலட்சிய முழக்கத்துக்கு, எதிர் நின்றோரையெல்லாம், தன்னை எதிர்க்க முடியாதவாறு செய்தார். முற்போக்கு எண்ணங்களுடன் கூட, பாரசீகத்திலிருந்த கம்யூனிஸ்டுக்கட்சியின் ஒத்துழைப்பும் இவருக்கு உண்டு. இதனால், ஆதிக்க நாடுகள் யாவும், இவரை சந்தேகத்தோடு பார்த்தன. இந்நிலையில், 'ஒருவனின் தேவைக்கே உரியதாயிருக்கும்' பாரசீகத்தில், குழ்

(9-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 23—8—53 [ஞாயிறு

இருவர்

★

"கொரிய சமாதானத்துக்காக 5000 பேரை அனுப்புகிறோம்"—என்று, பண்டித நேரு, பாராளு மன்றத்தில் தெரிவித்திருக்கிறார்

"அந்த 5000த்தில் ஒரு பகுதி தான், நீங்கள் 1000 பேரும். 'அரிச்சந்திரனை' ஞாபகத்தில் வைத்தபடி சென்று வாருங்கள்" என்று சென்னையில் விடை கொடுத்து, கப்பலேற்றியிருக்கிறார், ஆச்சாரியார்.

அமெரிக்காவுக்கும்— ரஷ்யாவுக்குமிடையே அகப்பட்டுச் சிக்கிச் சீரழிந்த கொரியாவில், சமாதானம் மலர, 5000 பேர் இந்திய மண்ணிலிருந்து அனுப்பப்படுகின்றனர்.

செய்தி கேட்டதும், அகில உலக நாடுகளில், நேருவின் 'ஜோதி' நன்றாகத் தென்படும்—அவரைத் தலைவராகக் கொண்டுள்ள, இந்திய உபகண்டத்தின் எழிலையும், இவ்வளவு பேரை அனுப்பிவைக்கக்கூடிய அளவுக்குப் பெற்றிருக்கும் வளத்தையும்பற்றி, ஏடுகள் தீட்டும்—'இதோ பாரீர், இவர்தான் அந்த ஜோதி!' என்று பண்டிதரைப் படம் போட்டுக் காட்டும்.

ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள கொரியாவுக்கு, சமாதானப் பணிகளில் ஈடுபடுவதற்காக, 5000 பேர் அனுப்பப்படுகின்றனர். அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, பண்டிதர் பேசுகிறார்! ஆச்சாரியார் வழியனுப்புகிறார்!!

காரணம்?—சமாதானம் எனும், மாபெரும் பணிக்காகவன்றோ, அவர்கள் அனுப்பப்படுகின்றனர்.

டில்லி முதல்வருக்கும், சென்னை முதல்வருக்கும், இச் சிறிய பணியில் ஈடுபட்டதுபற்றிய உள்ளெண்ணம், எதுவோ, அறியோம் ஆனால், 5000 பேரை, கப்பலேற்றி, கொரியாவில், சமாதானம் நிலைநாட்டுவதில், அக்கறை காட்டும், அகில உலக ஜோதியும் அவர்தம் தோழரும், இங்கே சிறைச்சாலைக்குள் கிடக்கிறார்களே, 5000 தோழர்கள், அவர்களைப்பற்றி, திருவாய் மலர்ந்து, சிறு சொல் செப்பினரா!

5000-பேர்—சிறைக்குள், கிடக்கிறார்கள். ஏன்?—விளக்கம், விரிவாக வந்திருக்கிறது, ஏடுகளில் பண்டிதர் வீசிய சுடுசொல்லைக் கண்டித்தும், அவர்தம் தோழர் கொண்டுவந்த கல்வித் திட்டத்தை எதிர்த்து அறப்போரிலீடுபட்டும் அக்கனை தோழர்கள், கிடக்கிறார்கள், சிறைக்குள். அனுதினமும் சென்று, கல்லக்குடியில் கடந்த 37-நாட்களாக, பெயர்மாற்றும் அறப்போரிலீடுபட்டு வருகிறார்கள். இந்த அறப்போர்களின் காரணமாகச் சிறையில், கிடக்கின்றனர், சுமார் 5000 தோழர்கள்! — பலர் மீது வழக்குகள்—அபராதம்—சொத்து பறிமுதல், போன்ற அட்டகாசங்கள்!!

இவை, நடைபெறுவது, எந்த பூமிக்கு பண்டிதர் பிரதமர் என்று கருதப்பட்டு வருகிறாரோ, அதே பூமியின் ஒரு பகுதியில்தான்.

ஆனால், சிறுமொழி, சிதறவில்லை! "ஏன், கல்லக்குடியென்று மாற்ற வேண்டுமென்கிறீர்கள்?" என்று சிறு குறிப்பு எழுதிக் கேட்கவில்லை! அமெரிக நாட்டிலிருக்கும் ஐசனைப் போல்— ஏதுமறியாதவராய் — யாதொன்றும் அறியாதவர் போலக் காட்சி தருகிறார்.

அவரது தோழர் ஆச்சாரியாரோ சட்டசபையின் முடிவைச் சிறிதும் மதியாது, கல்வித் திட்டத்தையும் கைவிடாது, சட்டப் புத்தகத்தைத் தோண்டுவதும், இங்கெந்த செ... ஷன்களை எடுத்து வீச என்... யோசனைகள் கூறுவதும், எஞ்சி... நேரத்தில் எங்காவது 'சிலை'களை... திறப்பதுமாக, உலவி வருகிறார்.

மக்கள் மன்றத்தில் நடைபெறும் மகத்தான நிகழ்ச்சியினைக் குறித்து அறிந்துகொள்ளும் ஆவல் பண்... தருக்கில்லை காரணம் தென்னவ... என்றாலே பொதுவாக வடவருக்... இருந்துவரும், அலட்சியமாகும்.

ஆச்சாரியாரோ, 'நான் யார்தெ... யுமா?' என்று அரிச்சந்திரனை ஒரு சமயமும் ஆண்டவனை மற்றொ... சமயமும் உதாரணபுருடர்களாக்... உபதேச காண்டம் நடத்தி வரு... கிறார். இது அகம்பாவமாகும்.

தனக்கு வரி செலுத்தி வா... வளிக்கும் மக்களின் குறைகேட்... உள்ளத் தெம்பில்லை—ஒருவருக்கு... இன்னொருவருக்கு, 'என் கேட்... வேண்டும்?' எனும் திமிர்.

இத்தகைய உத்தமர்கள்தா... உலக சமாதானத்துக்கு படை... அனுப்புகிறார்கள்—பணிபுரிய.

நாட்டின் ஒரு பக்கத்தில் நட... கும் அறப்போரிலீடுபட்ட கற்சா... 5000 தோழர்களைச் சிறையில... பூட்டிவிட்டு, தங்களது 'ஜோதி'... துலங்குவதற்காக, அயல்நா... களுக்கு, 5000 பேர்களை அனுப்... கிறார்கள்.

வெளியே அத்தர்பணம்! உள்ளே நரகல் நாற்றம்!! — இதைப்போ... ருக்கிறது, இவர்கள், போருக்கு...

நாட்டு மக்களின் குறைகேட்... குறைகளைக் களையும் பெருந்தன்மை... யும்; நாட்டுமக்களின் தீர்ப்பை மதிக்... கும் மாண்பும், அற்ற இவர்கள் கொரியாவுக்கு அனுப்புகிறார்கள் சமாதானப் படையை.

அகில உலகத்திலும் புகழ்ஜோ... வீசவேண்டுமெனும் ஆவல், அ... கைய காரியம் செய்யத் தூண்டு... றது.

'சொந்த' வீட்டில், அடாப... நடத்தும் கணவன், ஊராருக்கு உ... தேசம் செய்யக்கிளம்புகிறான்!

கள்ளச் சாராயம் காய்ச்சுவோ... மதுவிலக்கு உத்யோகம் வகிக்க... புறப்படுகிறான்!!

★

7-ம் பக்கத் தொடர்ச்சி

அரசு மலரவேண்டுமென்னும் குறிக்கோளோடு, 'ஷா'வுக்கிருந்த அதிகாரங்களையெல்லாம், கொஞ்சம் கொஞ்சமாக தன்வசம் சேர்க்க முனைந்தார். இது ஷாவுக்கு, எரிச்சலை யூட்டியது இது வளர்ந்து, கடந்த ஞாயிறு அன்று அவருடைய குழுவைச் சேர்ந்த ஜாகேதி எனும் ராணுவத்தலைவரின் ஒத்துழைப்போடு 'முஸாதிக்'கை வீழ்த்த, சதி செய்யப்பட்டது. இந்தச் சதி, கடைசி நேரத்தில், வெளியாகிவிட்டதால், பாரசீக மன்னர், தன்னுடைய நாட்டை விட்டுப் பறந்து சென்றார்!

'மன்னன் இல்லை!'—என்ற செய்தி கேட்டதும், பாரசீக மக்கள், பற்பல காரியங்களில் ஈடுபட்டதாகச் செய்திகள் வந்தன! 'ஷா'வின் சிலைகள் பொடிப் பொடியாயின — 'ஒழிக மன்னனாட்சி! வாழ்க முஸாதிக் ஆட்சி!!' எனும் முழக்கங்கள் எழும்பின—டெஹ்ரான் நகர முழுமையுமிருந்த மன்னனின் படங்கள், அகற்றப்பட்டன—என்றெல்லாம் செய்திகள் வந்தன. இந்தச் செய்திகள், உலவுமுன், இப்போது மற்றோர் செய்தி வருகிறது! முஸாதிக் ஓட நேர்ந்தது! முடிசூடிய மன்னன் திரும்புகிறான்!'—என்று. அதுமட்டுமல்ல முஸாதிக்கின் அமைச்சர் குழுவினர் அனைவரும் சிறை வைக்கப்பட்டிருக்கின்றனராம் — அவர்களில் முக்கியமாக இருந்தவரும் முஸாதிக்கின் அருமைத் தோழருமான பாதேமி, சதை சதையாகக் கொத்தியெறியப்பட்டுவிட்டாராம்! இந்தக் 'கோரத்தை'ப் படிக்கும் போது, வீரர் முஸாதிக், தப்பாமலிருந்தால், அவருக்கும் இதே கதி, நேர்ந்திருக்குமென்று தோன்றுகிறது.

*

உரிமை முழக்கம்! — எழுப்பிய, வீரர் முஸாதிக். அவர், பாரசீகத்தின் அரசுப் பொறுப்பை, ஏற்றது முதல், செய்துவந்த காரியங்களைக் கண்டோர் — அவர், சர்வாதிகாரியாக திட்டம்போட்டு வேலை செய்கிறார்!—என்று கூறிவந்தனர். இது அமெரிக்கப் பிரசாரம் என்று அதனை மறுத்தோர், உண்டு. ஆனால், அவர், பாரசீகத்துக்கு முழு உரிமை வாங்கித் தர முயன்றவர்!—இதை, மறுக்க முடியாது. அவ்விதம், உரிமைக்காகப் போராடியவர், இன்று ஓடுகிறார்! தன்னுடைய நாட்டைவிட்டு ஓடிவிட்டார்!! உரிமைக்காகப் பாடுபட்டவர்களில், கடந்த இரு வாரங்களில், இருவர் இத்தகைய கதிக்கு ஆளாகியிருக்கின்றனர் ஒருவர் சிறையிலே பூட்டப்பட்டுக் கிடக்கிறார்! இன்னொருவர் நாட்டைவிட்டே ஓடவேண்டியவரானார்!!

கடந்த வாரம் காஷ்மீரச் சிங்கம் ஷேக்அப்துல்லாவின் செய்தி, கலக்கியது—உலகை

இந்த வாரம்—பாரசீக வீரர் முஸாதிக் வீழ்ச்சி—கிடைத்துள்ளது, உலகுக்கு.

இருவரும் இன்று வீழ்ச்சியடைந்தனரென்றாலும், அவர்களுக்கு மக்கள் மனதிலிருக்கும், செல்வாக்கு, சாமான்யமல்ல!

உரிமை வீரர்களை மக்கள் மன்றம், என்றும் மறக்காது.

உரிமை முழக்கம்! — கிலிகொள்ளத் தூண்டும், புலிப்போர்வையில் உலவுவோரை. அதன் காரணமாக, உரிமை வீரர்களை, சிறைச்சாலைக்குள் பூட்டவும்—துப்பாக்கிகளுக்கு எதிரே நிறுத்தவும்—தூக்குமேடைகளில் நிறுத்தவும் — முனைவர் இவைகளைத் தப்பி ஓடி, காடுகளிலும் குகைகளிலும் 'வீடுகளை' அமைத்துக்கொண்டு உலவும்படியான கதியற்ற நிலையில் திரியும்படியும் நேர்வதுண்டு.

ஆனால், நாட்டை மலர்க்காடாக்க வேண்டுமெனும், தூய எண்ணமும், துணிவுமிருந்தால், அந்த விடுதலை வீரர்களே வெற்றிபெறுவர்

அப்துல்லா — காஷ்மீரை தனி நாடாக்க விரும்பியவர்.

முஸாதிக் — முடிதரிப்பின் பிடியிலிருந்து, ஈரானை விடுவிக்க விரும்பியவர்.

ஆனால், இவர்கள், இன்று, சீர்க்கதியாக நிற்கிறார்கள்! அப்துல்லாவுக்காவது, சிறைவாசம் கிடைத்திருக்கிறது! முஸாதிக் — தங்க இடம் தேடி அலையவேண்டியவரானார்.

முஸாதிக், வீழ்ச்சி—சரிதத்தில், முக்கியமானதாகும். விசித்திரங்களை உலகுக்குத் தந்தவரும், 'முஸ்லீம்' அரசுகள்—மத்திய கிழக்கு—இன்னும் என்னென்ன விசித்திரங்களைத் தரப்போகிறதோ!

ஆசிரியருக்கு கடிதம்

'எங்கள் பிரதேசத்தில் சுமார் 40,000 ஏக்கர் பூமியில் 40 தோட்ட முதலாளிகளால் தேயிலை, காப்பி, ரப்பர், சிங்கோனா முதலியவைகள் பயிரிடப்பட்டு, அவைகளுக்கான தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டு, ஏறக்குறைய 30 000 தொழிலாளர்கள் தொழிற்சாலைகளிலும் இதர காட்டு வேலைகளான கடின வேலைகளிலும் தினக்கூலிக்கு ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் இத்தொழிலாளர்களின் உழைப்பையும் வறுமையையும் பிறர் வஞ்சிக்காமலிருக்க 12—10—51ல் மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் இலாகா தனது A L 104 (119) ன்படி ஒரு உத்திரவைப் பிறப்பித்தது. இந்த உத்திரவுக்கு இங்குள்ள தோட்ட முதலாளிகள் மதிப்பே வைக்கவில்லை கடந்த இரண்டு வருஷங்களில் அக்காமலை, கருமலை, ஸ்டான்மோர், கடல பாறை, தாய்முடி, வாகமலை முதலிய எஸ்டேட்டுகளின் மானேஜ்மெண்டார் இந்த உத்திரவைமீறி நடந்து வருவதையும் தங்களுக்குச் சாதகமானவர்களுக்குப் பிரயோஜனமளிக்க இந்த உத்திரவைத் தவறாகப் பயன்படுத்தியதையும் நாம் பலமுறை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம் சர்க்கார் தனது உத்திரவை மீறி எதேச்சையாய் நடக்கும் எந்த முதலாளியின் மீதும் எவ்வித உறுதியான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் பொதுவாக அரசாங்கம் உத்திரவுகளைத்தான் பிறப்பிக்குமே தவிர அதை அமுல்நடத்தும் திராணி கிடையாது அல்லது அந்த உத்திரவுகள் முதலாளிகள் தங்களுக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக்கொள்வதற்கேற்ப ஏராத் தம் கொண்டவைகளாய்ப் பிறப்பிக்கப்படுகின்றன என்ற அபிப்பிராயங்கள் உருவாகி வருகின்றன. இதற்கு உதாரணமாக 1951 டிசம்பரில் இயற்றப்பட்ட தோட்டத் தொழிலாளர் சட்டமும் இதுவரை அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை. இவ்வித நிலைமையால் சென்னை மாகாணத்தில் ஏறக்குறைய 2,000,00 (இரண்டு லட்சம்) தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

ஜே. பி. ஜேபக்கனி, வால்பாறை.

அதிகாரமேந்திகள் அறியட்டும்!

வீதிகள்தோறும் கலவரம்

கடைகள், சூறையாடப்பட்டன

நிலைமை கட்டுக்கடங்கவில்லை.

துப்பாக்கிக்கு 13 பேர், பலி.

ஊரடங்குச் சட்டம் பிரகடனம்

கட்டிடங்கள். தீக்கிரை!

தண்டவாளங்கள், பெயர்க்கப் பட்டன.

தந்தி டெலிபோன் கம்பிகள் துண்டிக்கப்பட்டன

கலவரம் தாங்க முடியவில்லை'

தலைவர்கள் அறிக்கை விடுத்தும்—அட்டகாசங்கள் ஓயவில்லை!

*

"உணவு மான்யத்தை சர்க்கார் ரத்து செய்துவிட்டது—பாடசாலைகளில் போடப்பட்டு வந்த மத்தியான சாப்பாட்டையும் நீக்கிவிட்டது இவ்விதம் செய்த சர்க்கார், தபால் ரயில் கட்டணங்களை அதிகமாக்கிவிட்டது அரிசி விலையும், ஏறிவிட்டது. இந்த அக்கிரமத்தைக் கண்டிக்க வாரீர்! அரசாங்கத்துக்கு உங்களது அதிருப்திக் குரலைக் காட்டுங்கள்! ஆகஸ்டு 12, தேசிய எதிர்ப்பு தினம். திரண்டெழுவீர்! அன்று, கடைகளை மூடுவீர். ஊர்வலமாகச் செல்வீர். கோரிக்கைகளைக் கூறுவீர்"

இவ்வண்ணம், கடந்த 12-ந் தேதியை மட்டும், தேசிய எதிர்ப்பு தினமாகக் கொண்டாடும்படி, இலங்கைவாழ் எதிர்க்கட்சிகள், நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்தன.

அதேபோல், அன்றைய தினம் இலங்கைத் தீவு முழுமையும் எதிர்ப்பு தினமாகக் கொண்டாடப்பட்டது. அன்று, நடைபெற்ற விளைவுகள்தான், கலப்பிலிருப்பது!

தேசிய எதிர்ப்பு தினம்—மக்கள் குறைகளை, எடுத்துச் சொல்ல.

ஆனால், அந்தத் தினமோ, மக்களின் ஆத்திரத்தை, கண்சென்ற இடமெல்லாம், திருப்பிச் சென்றுவிட்டது. விளைவு விபரீதமாகியிருக்கிறது! கொள்ளை! தீ! பலாத்காரம்!—பேருருவெடுத்திருக்கிறது.

கண்டனநாள் அனுஷ்டிக்குமாறு கட்டளையிட்டனர்—தலைவர்கள்.

அரசாங்கத்தின் போக்கு கண்டு, அதிருப்தியடைந்த மக்களோ, கண்டனத்தோடு இருந்துவிடவில்லை—கண் சென்ற திசையெல்லாம் கலவரத்தையோட்டி, விபரீதமான விளைவுகளை உண்டாக்கியிருக்கிறார்கள்.

அவ்விதம் வெடித்த விளைவுகளும் அந்த ஒரே நாளுடன், போய்விடவில்லை—மறுநாளும் தொடர்ந்தது—கண்டன நாள் அனுஷ்டிக்குமாறு கட்டளைப் பிறப்பித்த தலைவர்களே, 'போதும்! நிறுத்துங்கள்!', என்று அறிக்கைகள் வெளியிட்டனர்—ஆயினும், அடங்கவில்லை நடந்தது—நடைபெற்றுக் கொண்டேயிருந்தது, தொடர்ந்து.

*

அதிருப்தியடைந்த மக்களின் உள்ளங்களில் பரட்சிக்கனலைமூட்டிவிட்டால். அதனை, எளிதில் அடக்கிட முடியாது. எரிமலைகளானோர், தக்கபக்கத் தோன்றும் வழிகளிலெல்லாம் பாய்ந்து, அக்கிரம ஆட்சியின்பால் தங்களுக்குள்ள ஆத்திரங்களைத் தணித்துக் கொள்ள முயல்வர். இந்த ஆத்திரத்தை மட்டுப்படுத்தி, மக்கள், தங்கள் குறைகளுக்காக மட்டும் 'போராடும்'படிச் செய்வதென்பது, இலேசான காரியமல்ல. இதனைத்தான், 'கண்டன நாள்' அனுஷ்டிக்கும்படி கட்டளையிட்ட தலைவர்கள், 'போதும்! போதும்!!' என்று சொல்லியும், பொங்கிய கடல் — அடங்கவில்லை; இலங்கை மக்களின் போக்கைக் கட்டுப்படுத்தவில்லை.

நல்லாட்சி இல்லாத நாட்டில் நலிந்தோர் உள்ளங்களில் கனலை மூட்டிவிட்டால். அது காட்டுத்தீயென உருவெடுக்கும். அயர்ந்தவனும், அலுத்தவனும், தன்னை ஆட்டிப் படைக்கும் அரசாங்கத்தின் மீதுகொண்ட அக்கிரமத்தில் இஷ்டமான காரியங்களிலெல்லாம் இறங்குவான், ஏதேதுவோ, நடைபெறும்!

அவன் கண்ணுக்கு அரசாங்கம் சம்பந்தமான எது தென்பட்டாலும் போதும் — பாய்வான்! தீ, வைப்பான்! பயங்கரநிலை உருவெடுக்கும்.

'ஐயோ! அக்கிரமங்களைப்பாரீர்!' என்று விபரீதங்களைக் கண்டபின் அலறும் அரசாங்கம் விபரீதம் வளரும் எனும் அறிகுறி தென்பட்டதுமே, அதனைக்கண்டறியவும் மக்களின் குறைகளை நிவர்த்திக்கவுமான வழிகளைக் கண்டிருக்கவேண்டும். ஆனால், இலங்கைச் சர்க்கார், செய்யவில்லை தீ. மூண்டது! பயங்கரம். சூழ்ந்துகொண்டது!!

*

தீ. பற்றிக்கொள்ளும்படி. மக்கள் உள்ளங்கள் இருப்பதற்குக்காரணம் ஆட்சியின் சிறுமைக் குறையேயாகும். ஆளவந்தோர், பொழிலிடையில், எழுசுவை விருந்துகளில் காலத்தைக் கழித்துக்கொண்டிருப்பதும்—ஆட்சிக்கு ஆளானோர் குடிசைகளில் குமுறும், வயிறோடு காலத்தைக் கழிக்கப் போராடிக் கொண்டிருப்பதுமான, நிலைமைகள் நீடித்தால், தீ பரவாமல், என்ன செய்யும்? புரட்சி வெடிக்காமலா, இருக்கும்!

எனவேதான், இலங்கைத் தீவு, கடந்த 12ந்தேதி முழுமையும் கலங்க நேர்ந்தது.

இலங்கையைவிட, இங்கேயிருக்கும் நிலை மிக மிக மோசமானதாகும். ஆளவந்தார் மக்களின் நிலையை மனதில் எண்ணிப் பார்க்காத காரணத்தால், அனர்த்தங்கள் உருவெடுத்தன—அங்கே. அதைவிடப்பன்மடங்கு ஆபத்துக்கள், வெடிக்கக் கூடிய நிலையில்தானிருக்கிறது, நம் நாடும்

இலங்கை சர்க்கார்—உணவு மான்யத்தை ரத்து செய்தது; இந்திய சர்க்காரும், ரத்து செய்தது, பல மாதங்களுக்கு முன்பு.

தபால் — ரயில், கட்டணங்களை உயர்த்தியது, சேனநாயகாசர்க்கார். இந்தத் 'திருச்சேவை' இரண்டாண்டுகளுக்கு முன்னரே செய்து முடிக்கப்பட்டது, நேருசர்க்காரால்.

அரிசியில்லை, எரிச்செல்லுகிறது—இலங்கையில். இங்கும்தான—இன்று நேற்றல்ல; ஏழெட்டு ஆண்டுகளாக.

இருந்தும், தீ! கொள்ளை! ஏற்படவில்லை, இங்கு. அங்கு, நடைபெற்றிருக்கிறது.

வறுமையால் கொட்டப்பட்டு வாழ்க்கைச் சுவையல் குறைகிப்போய், குமுறும் நிலையிலிருக்கும் கூட்டம், இங்கே — அதிகம் எனினும், இங்கே பலாத்காரம் உருவெடுக்கவில்லை. இங்கேயென்றால், இந்திய உபகண்டம் முழுமையும் என்றல்ல; நம்முடைய தென்னாட்டில்.

ஏனெனில், டிராம்கட்டணத்தை ஒரு தம்பிடி அதிகமாக்கியதற்காக, கல்கத்தா நகரில், நடைபெற்ற சம்பவங்களை நாம் அறிவோம். இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களைப் போன்றே கல்கத்தாவிலும் நடைபெற்றது—தீ, எரிந்தது! தாக்குதல் நடைபெற்றது!

கல்கத்தா! இலங்கை!! — இங்கெல்லாம். இவ்வித நிகழ்ச்சிகள்.

ஆனால், இங்கோ, ஆளவந்தாரின் போக்கை எதிர்த்து, அட்டகாசங்கள் உருவெடுத்ததாக எவரும், கூறமுடியாது.

அதற்குக் காரணம், இலங்கை சர்க்காரைவிட சென்னை சர்க்கார் நல்லது—கல்கத்தா ஆட்சியாளரைவிட கண்ணியம் நிரம்பியது, ஆச்சாரியார் சர்க்கார் என்பதல்ல—அவைகளைவிடக் கொடுமையானது, இது—அங்கெல்லாம் ஆட்சி புரிவோர் 'அரசியல்வாதிகள்'—இங்கே அரசுக்கோலேந்தியிருப்பவரோ, 'சாணக்கியர் — இருந்தும், தென்னாடு கொந்தளிக்கவில்லை! என்ன காரணம்?

கொந்தளிப்பு உண்டாகவில்லையென்றால், மக்கள் மனமெல்லாம் குளிர்ந்திருக்கிறதென்பதல்ல—குமுறுகிறார்கள்! எனினும், அந்தக் குமுறலை, சட்டவரம்புக்குட்பட்டு, அரசாங்கத்துக்கு உணர்த்துகிறார்களேயன்றி, கொந்தளிப்புமூலமாக, அல்ல.

வறுமைக்கும் வாழ்வுக்குமிடையே போராடிக்கொண்டிருக்கும் தென்னாட்டு மக்கள் ஆச்சாரியார் ஆட்சியேறிய நாள்முதல் செய்துவரும் அட்டகாசங்களைக் கண்டு, குமுறிக்கொண்டிருக்கிறார்கள் அந்தக் குமுறலைக் கண்டும் அவர் தன் 'கோணங்கி'க் கூத்தை நிறுத்தாமல்தானிருக்கிறார் — இது போதும், குமுறும் அவர்கள் உள்ளத்தை வெடிக்கச்செய்ய! ஆனால், நிகழ்ந்ததா? — இல்லை! 'புதிய கல்வித் திட்டத்தைப் புகுத்தினார். அப்போதாவது, மக்களின் ஆத்திரம் தூண்டிவிடப்பட்டதா? — இல்லை! M. L A-க்கள் மூலமும், தீர்மானங்கள் மூலமும்தான், அவருக்கு எடுத்துரைத்தோம். அவைகளை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்தார்—[illegible]ணும், எந்த அரசியல் கட்சிக்கும், உள்ளம் குமுறத்தான் செய்யும். அப்போதாவது, வெறியுணர்ச்சி, ஊட்டப்பட்டதா? இல்லை! சாத்வீக மறியல்தான், துவக்கப்பட்டது. அதுமட்டுமா? ஆண்டொன்றாக, டில்லி சர்க்காரைக் கேட்டுவந்தோம் — டால்மியாபுரத்தை, 'கல்லக்குடி'யாக்குமாறு. கவனிக்கவில்லை—டில்லி. பலாத்காரம் ஏற்பட்டதா? இல்லை! மகஜர்கள் எழுதினோம் — மதிக்கவில்லை; இந்த மதியாமை கண்டால், மனம் எரிமலையாகத்தான், ஆகும். ஆகவில்லை! அமைதியோடு சொன்னோம் —செய்தும் வருகிறோம் — நமமுடைய அறப்போராட்டத்தை கடந்த 37-நாட்களாக. கல்லக்குடியில் ஒருமாதத்துக்கு மேலாக, அறப்போர் நடந்துகொண்டிருந்தும், அதனைப்பற்றி சிறு வார்த்தை, செப்பவில்லை, டில்லி. சினம், எழும்பத்தான் செய்யும், எவருக்கும். எரிச்சல் உண்டாகாமலிருக்கமுடியாது ஏற்பட்டதா? இல்லை! இவ்வளவு தூரம் மிதிக்கப்பட்டு — பழி வாங்கப்படவுங்கூட — தென்னாட்டில், 'இலங்கை'யும் 'கல்கத்தா'வும்' ஏற்படாத காரணம் என்ன?

திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள் மன்றத்தில் உண்டாக்கியிருக்கும், பொறுப்புணர்ச்சியும், சாத்வீக முறையுமே ஆகும்.

அரசியல் வாழ்வில் பலாத்காரம் நுழைவது; நீர்த்தடாகத்தில், முதலையை விடுவதை ஒக்கும் — என்பதே, தி. மு. க வின் கருத்தாகும்.

இந்தக் கருத்தை, பிறந்த நாள் முதல், இன்றுவரை கூறிவருகிறது, தி. மு. க. — என்றும், கூறிவரும். அது, மக்கள் மன்றத்தில் உண்டாக்கியிருக்கும், மன மாறுதலால் தான், 'இலங்கை'யும் 'கல்கத்தா'வும்' ஏற்படவில்லை இங்கு. இதனை விளக்க, ஜூலை 15 நிகழ்ச்சியொன்றே போதும்.

ஜூலை 15—டில்லி தர்பாரின், திமிர்ப் போக்கைக் கண்டிக்க நாடெங்கும் ரயில் நிறுத்தம் நடைபெற்றது.

தி. மு. க வின் முடிவு கேட்ட மக்கள்—சென்றார்கள் — ரயில்வே நிலையத்துக்குள் சென்றார்கள் — தண்டவாளத்தின் ஓரமாகவும் சென்றார்கள் — ரயிலுக்குள் ஏறிய படியும் சென்றார்கள்.

சிறு குழப்பம்!—ஒரு இடத்தில் கூட நடைபெறவில்லை.

தண்டவாளம் பெயர்க்கப்பட்டது —ஒரு செய்திகூட காட்டமுடியாது

ரயில் பிரயாணிக்கும் தொண்டருக்கும் தகராறு—இவ்விதம், ஒரு சம்பவங்கூட நடைபெறவில்லை.

அவ்வளவு அமைதி! அத்தகைய சாத்வீகம்!!—இங்கே, இது.

ஆனால், அங்கோ — சர்க்காரின் போக்கைக் கண்டிக்க, ஒருநாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. அன்றைய தினம் மட்டுமல்ல, தொடர்ந்து—தலைவர்கள், 'போதும்! போதும்!' என்று சொல்லியுங்கூட — தீ! கலவரம்! நடந்திருக்கிறது.

டில்லியின் போக்கைக் கண்டிக்க —தி. மு. க.வும் ஒரு நாளைக் குறிப்பிட்டது—அதுவும், பகலில்மட்டும் என்று குறிப்பிட்டது. பகலில்மட்டும் அந்தக் காரியம் நடந்ததேயொழிய, ஆதவன் மறைந்ததும், அறப்போர் நிறுத்தப்பட்டிருக்கிறது.

மக்கள் தான்—இலங்கையிலும் ஈடுபட்டனர்.

மக்கள் தான்—இங்கும், நம்முடைய குரலுக்குச் செவி சாய்த்தனர்.

ஆனால், அங்குமட்டும், அப்படி! இங்குமட்டும், இப்படி!!

*

இதனால், இத்தகைய காரியங்களில் ஈடுபட்ட 'இலங்கை'யினருக்கும் 'கல்கத்தா' மக்களுக்கும்—நம்மனோருக்கும்—இடையேஉள்ள பேதத்தையல்ல விளக்க விரும்புவது.

அரசுபீடம் ஏறியோர், அந்தப் பீடத்தின் பிரதிநிதிகளான மக்களை மதியாவிடில், மனம் குமுறத்தான் செய்வர்—விளைவுகள், விபரீதமாகியே தீரும். அந்த விபரீதங்கள், 'இலங்கையில்' மட்டுமல்ல—எங்கெங்கு குறுகிய மதியினர் கோலோச்சுகிறார்களோ, அங்கெல்லாம் நிகழத்தான் செய்யும்.

ஆனால், இவ்வண்ணம் நிகழக்கூடிய நிலைமையிருந்தும் — அவ்விதம் நிகழ்வது தகாது— அது நம்முடைய பொருளையும் நம்மவரையுமே நாசப்படுத்திக்கொள்வதாகும் — எத்தகைய இடர் ஏற்படினும், அமைதியான முறையே வேண்டும்—சாத்வீகமே வாழ்வு தரும்—எனனம் வீசப்பட்டாலும், இழிசொல் குவிந்தாலும், இந்தப் பாதையிலிருந்து இம்மியளவும் மாறுதீர் — எனும் நிலையை, கட்சித் தொண்டர்களிடம் மட்டுமின்றி, நாட்டிலும் உண்டாக்கியிருக்கிறது, தி. மு. க.

இதனை, எவரும் மறுக்கமுடியாது! கல்லக்குடியில் துப்பாக்கி மழை பொழியப்பட்ட தேதியன்று —தொண்டர்களைப் போலீசார் தடியால் தாக்கிகொண்டிருக்கின்றனர்; இதனைக் கண்ட பொதுமக்களோ, 'அடிக்காதே!' என்றுகூச்சலிட்டிருக்கின்றனர்; அதனைக் கண்டதும், அவர்களைக் கலைக்க; துப்பாக்கி முழங்கியிருக்கிறது; அதைக் கண்ட பொதுமக்கள், 'சுடாதே! சுடாதே!' என்று கூவியிருக்கின்றனர். அந்த நேரத்தில், அங்கே நின்ற ஒரு அறப்போர் தொண்டர், செய்ததென்ன? குண்டுமழை கண்டு ஓடிவிடவில்லை! குமுறியவண்ணம் முழக்கமிடும் மக்களைப் பார்த்து, இரு கைகளையும் தூக்கி, 'அமைதியாயிருங்கள்!!' 'அமைதியாயிருங்கள்!!' என்று கத்தியிருக்கிறார். மக்களிடம் எங்கே அமைதி குலைந்துவிடுமோ என்றஞ்சிய தோழர், கரத்தை யுயர்த்தி, 'அமைதி! அமைதி!' என்றார். விளைவு — அவருடைய விரல் ஒன்றை, குண்டு பிய்த்துக்கொண்டு போய்விட்டது!! அவ்விதம், குண்டு பொழியும்போதும், அமைதியும் சாந்தமும் நிலவவேண்டுமெனும், தி. மு. க.வின் பாதையைப் பின்பற்றும் கழகத் தோழர்கள், இலட்சக்கணக்கிலிருக்கிறார்கள். இதனால் தான், இலங்கை'யும் 'கல்கத்தா'வும் இங்கே ஏற்படவில்லை! அரசோச்சுவோரின் அட்டகாசப் போக்கால் அவதியுறும் மக்கள்—தங்கள் ஆத்திரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு — தி. மு. க. காட்டிய, அறப்போர் பாதையில் சென்றிருக்கிறார்கள்.

இத்தகைய 'அன்புப் பாதை'யில் சென்று ஆட்சிபீடமேறியோரின் அதிகாரத் தாபாரையும், அவருக்கு 'சாமரம்' வீசும் தாடசியையும் கலந்தும் மக்கள்பால் கவனத்தை இழுக்கும்படிச் செய்யும் தியாகிகள்கூடாரமாம் தி. மு. க.வின்மீதுதான் பழி, வீச முயல்கிறார்கள், பச்சோந்தியின் உடலமைப்பும், கழுகு உள்ளமுங்கொண்ட சிலர் அதற்கு 'புதுக்கிராமத்தை'த் துணைக்கழைக்கின்றனர். அவர்களின் சிறுமதியும், சூது நோக்கும், நேர்மையின்முன்—தூள் தூளாகும். அத்தகைய நேர்மைக் கூடாரந்தான், நம்முடைய கழகம். அதன் அன்புவழி, ஒருநாள் இன்று பழி வீசும், 'இத்தகையவர்' கண்களில் நீரை வரவழைக்கும்! நீதியின் மீது, பழி வீசியோர்—நெஞ்சம், ஒருநாள், கலங்காமற் போகாது!! அந்த நாளும், வெகு தூரத்திலில்லை. அறியட்டும், அதிகாரமேந்திகள்.

பம்பாய் தி.மு.க. செயற்குழுகூட்டம்

ப. தி மு. க. செயற்குழு கூட்டம் 6—8—53 மாலை ப. தி. மு. க. செயலாளர் நெல்லைச் செழியன் தலைமையில் நடைபெற்றது. கல்லக்குடி போராட்ட நிதி வசூலித்து, சி பி சிற்றரசு அவர்களுக்கு அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது.

அந்மதரி (பம்பாய்) தி. மு. க. கிளை துவக்க விழா

9—8—53 மாலை பம்பாய் தி. மு. க. செயலாளர் நெல்லைச் செழியன் தலைமையில, அந்மதரி கிளை துவக்க விழா நடைபெற்றது. எஸ். சுகுணகரன் கொடியேற்றிவைக்க ச. த மு. ஆரியசங்காரன் அண்ணாதுரையின் படத்தைத் திறந்துவைக்க, தங்கவேலன், எ. எல். பெருமாள், தம்பித்துரை, வி. ஏ. செழியன், செண்பகபாண்டியன், புனைத்தோழர் கறுப்பராசன் ஆகியோர் கழகத்தைக் குறித்துப்பேசினர்.

பின், எஸ். கணேசன் செயலாளராகவும் எஸ். முத்து துணைச்செயலாளராகவும், பி சண்பகபாண்டியன் பொருளாளராகவும் உறுப்பினர்களடங்கிய நிர்வாகக்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தூத்துக்குடி, கல்லக்குடி ஆகிய இடங்களில் துப்பாக்கிப் பிரயோகத்தால் மாண்டதோழர்களுக்கு வணக்கம் செலுத்தி, அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்துக்கொண்டும், மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திய சென்னை முதன் மந்திரி இராஜகோபாலாச்சாரியாரை வன்மையாகக் கண்டித்தும், டால்மியாபுரத்தை கல்லக்குடியாக மாற்றியமைக்க சென்னை அரசாங்கத்தை கேட்டுக்கொண்டும், ஆச்சாரியாரின் புதியகல்வித்திட்டத்தை கைவிடும்படியும் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேறின.

காஞ்சியில் பொதுக் கூட்டம்

26—8—53 புதன்கிழமை
மாலை 6-மணிக்கு
சின்னகாஞ்சிபுரம்
யாகசாலை மண்டபம் தெருவில்
(போலீஸ் ஸ்டேஷன் அருகில்)

புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்த்து மூன்று வார சிறை தண்டனை பெற்று, மீளும்

காஞ்சி நகரசபை உறுப்பினர்
சி வி இராஜகோபால் அவர்களுக்கு
ஈழத்தடிகள் தலைமையில்
வரவேற்பளிக்கப்படும்

அதுசமயம் விசுகிரவாண்டி, கோவிந்தசாமி எம். எல் ஏ. நாஞ்சில மனோகரன் ஆகியோரும் கலந்துகொளவர்.

மேலும், ஐவர் வழக்கு 25—8—53-ல் முடிவுபெறாவிடில் அண்ணாதுரை, நெடுஞ்செழியன், சம்பத், மதியழகன், நடராசன் ஆகிய ஐவரும் கலந்துகொள்வர்.

—அறிவு வளர்ச்சி கழகத்தார்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தாங்குவார் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்த மறியல் செய்யும் சட்டத்திற்கு உட்பட்ட உரிமையைக்கூட சென்னை அரசாங்கம் பறித்துக்கொண்டு, ஆச்சாரியார் வீட்டிற்குச் சென்று, அவரைக் காண வழி செய்யாமல் கைது செய்தும், அடித்து விரட்டியும், மண்டையைப் பிளக்கச் செய்தும், கைகால்களை ஒடித்தும் துன்புறுத்தியிருக்கிறது. தியாகராய நகரில், சிறிது அமைதி குறைந்தது என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டத்தை மேற்கொண்டவர்களால் அல்லவென்பதும், மறியல் உரிமையைப் பறிக்கும் வகையில் நடந்துகொண்ட போலீசாரின் நடவடிக்கைகளே காரணமாகும் என்பதும் நன்கு விளங்கும். மறியல் என்ற சட்டத்திற்குட்பட்ட அமைதியான கிளர்ச்சியை திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கியது எவ்வளவு அவசியமும், அறிவுடைமையும் ஆகும் என்பதற்கு, சட்டசபையில், அந்தத் திட்டம் தோற்றுப்போனதே, போதுமான சான்றாகும். புதிய கல்வித்திட்டத்தை நிறுத்தி வைத்து, அதனை நிபுணர் கமிட்டிக்கு விட வேண்டும் என்று, 139 சட்டசபை உறுப்பினர்கள் ஓட்டுகள் மூலம் நிலைநாட்டிக் காட்டியபிறகும், அதனை மதியாது, 137 சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவை மட்டுமே பெற்று தம் இலட்சியத்தில் தோல்வியடைந்த முதலமைச்சர் ஆச்சாரியார், திருத்தத் தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டு வராமல், சர்வாதிகாரம் செய்கிறார் என்றால், மறியல் என்ற ஆயுதத்தைத் தவிர, வேறு எந்த ஜனநாயக முறையால் அவரைத் திருத்த இயலும்? எனவே, மறியலுக்கு ஆதரவு அளித்தது, நாட்டின் எதிர்கால மக்களின் நல்வாழ்வைக் காப்பாற்றவும், இன்றைய மாணவர் சமுதாயத்தின் நலனைப் பேணவுமேயாகும் என்பது எளிதில் புலனாகும். இப்படிப்பட்ட அமைதியான புதிய கல்வித்திட்ட எதிர்ப்பு மறியல் கிளர்ச்சி, எப்படிக் குற்றமாகும்?

அடுத்து, ரயில்நிறுத்தப்போராட்டத்தில், திராவிட முன்னேற்றக்கழகம் கையாண்ட நோக்கத்தையும், மேற்கொண்ட செயலையும், உற்றுக் கவனித்தால், ரயில் நிறுத்தப் போராட்டம், தாயகத்தின் தன்மான உணர்ச்சியைக் காப்பாற்றவும், விடுதலை வேட்கை உணர்ச்சியை வளர்க்கவும், அவசரப்பட்டு, தன்னிலை மறந்து, சொல்லக்கூடாத 'நான்சென்ஸ்' என்ற சொல்லை, திராவிட நாட்டினர் மீது அடிக்கடி சொல்லத் தயங்காத இந்தியப்பிரதமர் பண்டித நேரு, இனித்தன் செய்கைக்கு நாணி, திருந்துவதற்கான உணர்வை ஊட்டவும் எடுத்துக் கொள்ளப்பட்டதாகும் என்பதை நன்கு அறியலாம். ரயில் நிறுத்தக் கிளர்ச்சி, பொறுப்பான பதவியில் இருக்கும் நேருவை உணர வைப்பதற்கேயாகும். இது தான் எங்களது தூய நோக்கம். இந்த வழியைத் தவிர, வேறு சிறந்த வழியெதையும் நேரு அவர்கள் விட்டு வைக்கவில்லை. எழுதிப்பார்த்தோம்; தீர்மான வடிவில் கேட்டுப் பார்த்தோம்; சமாதானம் கூறச்சொல்லிக் கேட்டோம்—சென்ற ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து! அண்மையில் பண்டித நேரு, நிலைமையை நன்கு உணர மறுத்து, பொறுப்பற்ற முறையில், ரயில் நிறுத்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களின் செய்கையை 'நான்சென்ஸ்' என்று கண்டித்ததோடு, இனி இவ்விதம் செய்தால் 'கடுமையான நடவடிக்கை எடுப்பேன்' என்று சவால் விடுவதுபோல் கூறினார். பொறுப்பற்றமுறையில்பேசும் பண்டிதநேருவுக்கு அவரது தவறை உணர்த்தவும், புண்பட்ட நமது நெஞ்சத்தை அவருக்குக் காட்டவும் அமைதியான முறையில், 15-7-53-ம் நாள் பகல்பொழுதில் மட்டும், ரயில்வே சொத்துக்களுக்கு இம்மியளவு சேதமும் ஏற்படாத வகையில், ரயில் நிறுத்தப் போராட்டத்தை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ரயில் நிறுத்தத்தின் நோக்கம், பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்க அல்ல; அதிகாரிகளுக்குத் தொல்லைகொடுக்க அல்ல; சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்க அல்ல; வேறு, அமைதிக்குப் பங்கம் வரும் செயலைச்செய்ய அல்ல—பண்டித நேருவின் கூற்றின் மீது கொண்டுள்ள வெறுப்புணர்ச்சியின் அறிகுறியாகவும், நேரு திருந்தவும் ஆகும்.

எங்களது போராட்ட நிகழ்ச்சிகளின் உள்ளக்கிடக்கையை அறிந்துகொண்டால், எங்களது நோக்கம் எவ்வளவு தூய்மையானது என்பதை, யாவரும் நன்கு உணரக்கூடும்.

இன்றைய அரசாங்கத்தால், அதன் எண்ணப்படி, நாங்கள் குற்றக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறோம். நாங்கள் குற்றமற்றவர்கள் என்பதைச் சொல்ல, ஏராளமான சாட்சியங்கள் உண்டு. அவைகளை இங்கே கொண்டுவந்து நிறுத்த எங்களுக்கு வாய்ப்பும் வசதியும் இல்லை. அவைகள் தான் பொது மக்களின் நல்ல எண்ணம்; பொதுக் கூட்டங்களிலும், மாநாடுகளிலும், அவர்கள் எழுப்பும் குரல்; வளர்ந்து வரும் மாணவரின் எழுச்சி; தங்கள் பிள்ளைகள் நன்கு கற்றுத்தேர்ந்து செயற்கரிய செய்யவேண்டும் என்ற பெற்றோரின் ஆவல்; புதிய கல்வித் திட்டத்தைக் கண்டு கவலையுற்றிருக்கும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கல்வி நிபுணர்கள், அரசியல் அறிஞர்கள், கல்வி, பொருளாதாரத் துறையில் நாடு வளர வேண்டும் என்ற நல்லெண்ணமுடையோர்; 'கல்லக்குடி,' 'டால்மியாபுர'மாகக் காட்சியளிக்கின்றதே என்ற கவலையுறும் கல்லக்குடி மக்கள்; அவமானம் தாங்கிக் கொள்ள முடியாமல் வருந்தும் நாட்டுப் பற்றுடையோர்; நேருவின் இழிச் சொல்லைத் தாங்கிக் கொள்ள முடியாத திராவிடப் பெருங்குடிமக்கள்—'இவர்கள் எல்லோரும் எங்களுக்கு சாட்சியங்கள்'— ஆனால் அவர்கள் எல்லோரும் இங்கே வர இயலாது.

நாங்கள் வெளியே நடமாடினாலும், சிறைக்குள்ளே தள்ளப்பட்டாலும், திராவிடத் தாயகத்தின் விடுதலைக்கான எண்ணங்களிலே தான் எங்கள் சிந்தனையைச் செலுத்துவோம். எங்கள் நோக்கம் தூய்மையானது என்கிறோம்! திராவிடத் தாயகத்து அரசியல், பொருளாதார, சமூக விடுதலைக்கான செயல்களிலே ஈடுபடுவது, குற்றம் என்று கருதுகிறது அரசாங்கம்! தாயக விடுதலைக்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டதற்காக மேன்மை தங்கிய நீதிபதி அவர்கள் தண்டனை கொடுக்க முன்வந்தால், 'மாங்குயில கூவிடும் பூஞ்சோலை, எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' என்று மகிழ்வுடன் ஏற்க இசைகிறேன் என்பதை, பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வாழ்க தமிழ்! வாழ்க திராவிடம்!

என் கடமை புனிதமானது

ஈ. வி. கே. சம்பத் வாக்குமூலம்

கனம் நீதிபதி அவர்களே!

எனது தலைவர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களும், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் நானும், இந்தியன் பினல் கோர்டின் கீழ் பல செக்ஷன்களின் படியும், இந்தியன் ரயில்வே ஆக்டின்கீழ் பல செக்ஷன்களின்படியும், குற்றம் சாட்டப்பட்டு நிற்கிறோம். அந்தக் குற்றங்களை நிரூபிப்பதில் சர்க்கார் வெற்றியடைந்தால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு எதுவாயிருப்பினும் நான் மகிழ்ச்சியுடன் ஏற்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நான் பெருமையாகக் கருதி பணியாற்றும் திராவிட முன்னேற்றக் கழகமோ, இங்கு குற்றவாளிக் கூண்டில் நிற்கும் எங்கள் ஐவரில் யாருமோ, என்றும் பலாத்காரத்தின்மூலம் எங்களது கொள்கைகளையும், லட்சியங்களையும் அடைய முயன்றதில்லை.

இந்த வாக்குமூலத்தில் முதலில் ஒன்றைத் தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன். இந்த வழக்கில் எனது தலைவர் எனது தோழர்கள் மூவர், நான், ஆகிய ஐவரே குற்றவாளிகள் என சர்க்கார் குற்றம் சாட்டியிருந்தபோதிலும், டில்லியிலுள்ள தனது எஜமானர்களிடம் கட்டளைகளைப் பெற்று ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் திரு. சி. ராஜகோபாலாச்சாரியாருக்கும், இந்த நாட்டில் தங்களது உரிமைகளை நிலை நாட்டிக்கொள்ளப் போராடும் மக்களுக்கும் இடையே உள்ள ஓர் பெரும் வழக்கு என்பது தான் எனது எண்ணம்.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பத்தின் வரலாறு மிகச் சுருக்கமானது; மிகத் தெளிவானது. இராஜகோபாலாச்சாரியார் தலைமையில் அமைக்கப்பட்டு, இயங்கிவரும் அமைச்சர் குழு அரசியல் அமைப்புப்படி, நீடிக்க உரிமையுடையதல்ல.

நம்முடைய ராஜ்யத்தின் எந்த ஒரு தொகுதி மக்களுடைய அனுமதியும் பெறாத ஒரு பெரிய மனிதர், கவர்னருடைய நியமனத்தின் தயவால், முதன் மந்திரியாக, சட்டசபைக்குள் நுழைந்தார். மக்கள் தங்கள் கண்டனத்தையும், வெறுப்பையும், சட்டவரம்பிற்குட்பட்ட நியாயமான வழிகளில் தெரிவித்தனர். ஜனநாயகமற்ற அரசாங்கம், அரசியல் சட்டத்திலிருக்கும் சந்து பொந்துகளில் அடைக்கலம் புகுந்து தொடர்ந்து பதவியிலிருக்கிறது. முதன் மந்திரி, தான் கடவுளால் அனுப்பப்பட்டதாகப் பறைசாற்றி, தன்னுடைய அரசாட்சியைத் துவங்கினார். சில மாதங்களுக்குப் பிறகு, உண்மையில், அவர் நியாயப்படி அடையக்கூடாத அந்தப் பதவியைப் பிடித்துக் கொண்டு, தன்னை இறக்க, இந்த உலகிலேயே எந்த சக்தியும் கிடையாது என்று நினைத்தார்

பொதுமக்கள் நல்வாழ்வுக்கும், குழந்தைகளின் கல்விக்கும் உலை வைக்கக்கூடிய சட்டங்களைப் பிறப்பிக்க ஆரம்பித்தார் அவர், சட்டங்களைப் பிறப்பிப்பதன்மூலம், சரித்திரத்தை உண்டாக்கப் போவதாக வெளிப்படையாகவே சொன்னார். அவருடைய புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை அரசாங்கத்தின் உத்தரவாக்கி, சரித்திரத்தை உண்டாக்க ஆசைப்பட்டிருக்கிறார்.

புத்தர், இயேசு, மகமது சாக்ரடீஸ் போன்றவர்களும், மற்றப் பெரிய மனிதர்களும் பெருந் துன்பங்களைத் தாங்கி, பெரிய சாதனைகளின்மூலம் சரித்திரத்தை உண்டாக்கி இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும் மக்களும், நாடுகளும், குருதியைக் கொட்டியும், உயிர்களைப் பலி கொடுத்தும், எதேச்சாதிகாரிகளையும், எதேச்சதிகாரத்தையும், வீழ்த்தி, வரலாற்றை உண்டாக்கி இருக்கிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும். ஆனால், இப்பொழுதிருக்கிற ஜனநாயகமற்ற முறையில் அமைந்திருக்கும் அமைச்சர் குழுவை தவறான அரசியலமைப்பு முறையால் தடுக்க முடியாது.

இதன்மூலம், வரலாற்றை, மானங்கெட்ட வரலாற்றை, அரசாங்கச் சட்டங்களின் மூலமும், அதிகாரத்தின் துணைகொண்டும், வெற்றிகரமாக உண்டாக்க எண்ணியிருக்கிறார்.

இங்கே, நான், புதிய கல்வித்திட்டத்தின் தன்மைகளைப்பற்றி விவாதிக்கவில்லை; ஆனால், அந்தத் திட்டம் புகுத்தப்பட்ட விதத்தையும் அதை எதிர்ப்பதற்கு எங்களுக்கிருந்த ஒரே வழியையும் பற்றி மட்டுமே, குறிப்பிட விரும்புகிறேன்.

அவர், அத்திட்டத்திற்காக, தான் பொறுப்புடன் கட்டுப்பட வேண்டிய சட்ட சபையைக் கலக்கவோ, அதன் அனுமதியைப் பெறவோ இல்லை.

பெரிய சமுதாயத்தின் அமைப்பையே பாதிக்கக்கூடிய பெரும் மாறுதலைக்கொண்ட ஒரு புதிய கல்வி முறையைக்கொண்டு வரும் போது, சட்ட சபையைக் கலந்து அதன் அனுமதியைப் பெறாததன் மூலம், அமைச்சர் குழு, பொதுமக்களின் எண்ணத்தையும், நலத்தையும் வெகு துச்சமாக மதித்திருக்கிறது.

நூற்றுக்கணக்கான கூட்டங்களும், மாநாடுகளும், ராஜ்யத்தின் பல ஆயிரம் மக்களின் கையெழுத்திட்ட மனுக்களும், சென்ற தூதுக்களும், கடைசியாக இருந்த, ஆனால் நிச்சயமான வழியான சட்டசபைத் தீர்மானமும், அவரை அசைக்க முடியவில்லை. அவரைச்சூழ இருந்த அதிகார வர்க்கத்தினர், அவரையும் அவரது திட்டத்தையும் போற்றிப் புகழ, இந்த விஷப் பரீட்சையில் அவர் இறங்கினார்.

திராவிட முன்னேற்றக் கழகம், தமிழகத்தில் உள்ள மிகப் பெரிய அரசியல கட்சியாகும். மக்கள் தங்களுக்குள்ள குறைகளைத் தீர்த்துக் கொள்ளவும், தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ளவும். திராவிட முன்னேற்றக் கழகத்தையே நம்பியுள்ளனர்.

எங்கள் கழகத்தின் இலட்சியங்கள், சமுதாய நீதி, பொருளாதாரச் சமத்துவம், சுதந்திரத் திராவிடம் அமைத்தல் ஆகியவையாகும்.

பொது மக்கள் நலத்திற்கு கேடு சூழும்போது, அவர்கள் உரிமைக்குப் பங்கம் விளையும் பொழுது

தி. மு. க. வால் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது.

ஆனால், மக்கள் உரிமைகளுக்காகப் பாடுபடும் எந்த விடுதலை இயக்கமும், ஓய்வாக சட்ட புத்தகத்தைப் பார்த்துத் திட்டங்கள் தீட்டிக் கொண்டிருக்கமுடியாது. அதுவும், குறையுள்ள நமது நாட்டு சட்ட அமைப்பில் உள்ள சந்து பொந்துகளில் மக்கள் விரோதிகள் பதுங்கி விடுவதும், அவர்கள் கையில் பதவிகள் சிக்கி விடுவதும், அதனால் மக்கள் உரிமைகளுக்கும், நலன்களுக்கும் பேராபத்து விளைவதும், சர்வ சாதாரண நிகழ்ச்சிகளாய் இருக்கும் நமது நாட்டில், குன்றுபோல் குவிந்திருக்கும் சட்ட புத்தகங்களை நாடி, மக்கள் பரிகாரம் காணுவது சாத்தியமும் அல்ல, வழக்கமுமல்ல.

இந்தக் கொடுமையான சட்டம் கொணடுவந்தவரின் வீட்டிலே, அவர் அதைக் கைவிடும்வரை அமைதியான மறியல் செய்வதுதான் எங்கள் முன்னால் இருந்த கடைசி, சட்டத்துக்கு ஒத்த வழியாகும்.

இந்தப்படி, எங்கள் செயற்குழு தீர்மானித்து, கண்ணியத்தோடும், பலாத்கார மற்ற முறையிலும், தலைமை வகித்து மறியலை நடத்தும்படி நான் நியமிக்கப்பட்டேன். நான் இதைச் செய்வதற்கு முன்பேகைது செய்யப்பட்டுவிட்டேன். ஆனால், என்னைக் கைது செய்ததன்மூலம் மறியலை நிறுத்திவிட முடியவில்லை.

நான் கைது செய்யப்பட்டேன். ஆனால் தங்கள் உயிரைப் பணயம் வைத்து, அந்தக் கொடியை ஏந்த அநேகர் தயாராய் இருந்தனர். எங்களுடைய செயற்குழு விரும்பியது போலவே 14ந்தேதி ஆரம்பிக்கப்பட்ட மறியல், சட்டசபை ஒத்தி வைக்கப்படும் வரை தொடர்ந்து நடந்தது.

நூற்றுக்கணக்கான மக்கள், ஆண்களும், பெண்களும், கைது செய்யப்பட்டனர், தாக்கப்பட்டனர், மிருகத்தனமாகக் கண்ணீர் புகையால் துன்புறுத்தப்பட்டனர். ஆனால், அவர்கள் அதை அமைதியோடும், பொறுமையோடும், ஏற்றுக்கொண்டு கட்சியின் கட்டளைப்படி அவ்வளவு அடக்கு முறைகளையும், அவமானங்களையும் பலாத்காரம் சிறிதுமின்றி ஏற்று, கண்ணியத்தைக் காப்பாற்றிவிட்டனர்.

நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை. என் நாட்டிற்குச் செய்ய வேண்டிய புனிதமான கடமையைத்தான் நான் செய்தேன். என்னுடைய கடமையைச் செய்ததற்காக நான் குற்றவாளியாக ஆக்கப்பட்டு, நீண்டகால, கடும் சிறைவாசம் அளிக்கப்பட்டால், நான் அதை மிக மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வேன்.

என் நாடு, நான் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்பியதோ, அதைச் செய்ததாகவே நான் உணர்கிறேன். என்னுடைய இடத்தை நிரப்ப வேறு ஒருவர் வருவார். அவரும் இதே கொடுமைக்காளானால், மற்றொருவர், அந்த இடத்திற்கு வருவார். இது, எந்த விடுதலை இயக்கத்திலும் காணப்படும் மகிழ்ச்சிகரமான தொடர் சங்கிலியாகும்.

இந்தியாவின் தற்போதைய பிரதமர், மகாத்மா காந்தி போன்றவர்களெல்லாம்கூட, அப்பொழுது இருந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தால், இதைவிடக் கொடுமையான செக்ஷன்களின்கீழ் வெற்றிகரமாக தண்டனை விதிக்கப்பட்டார்கள். ஆனால், அவர்களை, வரலாறு, தியாகிகள் என்று பொறித்திருக்கிறது. அவர்களுக்கு செக்ஷன்கள் அளித்த தண்டனையை, வரலாறு, வேறு தீர்ப்பளித்து, வேறு பெயரிட்டு அழைக்கிறது.

வரலாற்றின் தீர்ப்பில் வற்றாத நம்பிக்கையும், மக்கள் விடுதலைக்காகப் போராடி உயிர் விடுகிறவர்கள் கேவலப்படுத்தப்படுவதில்லை என்ற உண்மையில் நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு.

கடைசியாக, சார்லஸ் பிராட்லாவுக்கு இந்திய தேசியக் காங்கிரஸ் 1889-ல் வரவேற்பு அளித்தபோது, அவர் அதற்குப் பதில்சொன்னதை, மேற்கோள் கூறுகிறேன்:—

“உங்கள் பொறுமைக்கு ஊக்கமளிக்க நான் உங்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்; அதுதான், இங்கிலாந்தில் பெரிய சீர்திருத்தங்கள் எல்லாம், மிக மெதுவாகவே வெற்றியடைந்தன என்பது. அந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்தவர்களெல்லாம் கலகக்காரர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, சிலமயங்களில் குற்றவாளிகளாக சிறைகளில் அடைக்கப்பட்டனர். ஆனால் அவர்களுடைய எண்ணங்களும், பேச்சுகளும் நிலைத்து நின்றன. சிறைவாசத்தால் உண்மையைச் சிதைத்துவிட முடியாது. அதை, கொஞ்ச நாளைக்கு தடுக்கலாம்; ஒரு மணி நேரத்திற்குத் தடைப்படுத்தலாம்; ஆனால் சிறைச் சுவர்களுக்குள்ளே அது மின்சக்திபெற்று வளர்ந்து, அங்கிருந்து வெளிவரும்போது, உலகத்தையேஒரு உலுக்கு உலுக்கிவிடும்”

என்னுடைய வாக்குமூலம் முடிந்தது.

பலாத்காரம் தி. மு. க. வுக்கு உடன்பாடற்றது

என். வி. நடராசன் வாக்குமூலம்

சர்க்கார் தரப்பில் என்மீது சாட்டப்பட்டுள்ள குற்றப்பட்டியல்களைப்பற்றி எனது விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசியலார் என்மீது சாட்டியுள்ள குற்றங்கள் அனைத்தும் சட்டத்திற்கும், நியாயமுறைக்கும், நேர்மாறானவைகள் என்பதை கனம் நீதிபதி அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் நாட்டுப் பெரும் சமுதாயமும், நாட்டுக்கு உரிமையுடையவர்களுமான திராவிட மக்களின், குறிப்பாக திராவிடச் சிறார்களின், கல்வியையும் முன்னேற்றத்தையும், தகர்த்தெறியும் வகையில், சென்னை மாநில முதலமைச்சர் தோழர் ராசகோபாலாச்சாரியார் அவர்கள் தமது வர்ணாஸ்ரம கல்வித்திட்டவாயிலாகவும், திராவிட சமுதாயத்தின் விடுதலைப் போராட்டங்களையும், திராவிட சமுதாயத்தினரை— அதாவது தென்னாட்டவரையும், பொறுப்பு மிக வாய்ந்த பதவி வகித்துவரும் இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அவர்கள் மிகக் கேவலமான சொற்களால் இழித்தும், பழித்தும், பேசி

திருமண அழைப்பு

அன்புடையீர்,

வணக்கம். 27—8—53 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் **நான்**, சிதம்பரம் உயர்திரு. சு. கணபதி அவர்கள் மகள் **தயாநிதியை**, வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் திருமண விழா, சிதம்பரம், 9-A கன்னிராமப் பிள்ளைத் தெரு இல்லத்தில் நடைபெறும். இயக்கத் தோழர்கள் இதனையே அழைப்பாக ஏற்று விழாவில் கலந்து மகிழ்விக்க வேண்டுகிறேன்.

'தம்பி' அச்சகம்,
சிதம்பரம்.

அன்பன்:
தில்லை-வில்லாளன்.

வரும் போக்கினைத் திருத்த யான் முற்பட்டது குற்றமாகுமா?

ஜனநாயகப் பண்பு, சட்டம், அமைதி, மக்களின் தன்மானம் ஆகியவைகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை ஏற்றுள்ள சென்னை மாநில முதலமைச்சரும், இந்தியப் பிரதமரும், அப்பெரும் பொறுப்புகளிலிருந்து, கடமைகளிலிருந்து தவறி நடப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அவ்வநீதிகளை, அமைதியான முறையில் எதிர்த்து ஆட்சிப்பீடத்தில் உள்ளோருக்கு அவர்களது தவறுதல்களையும், அதே சமயத்தில் மக்களது கோரிக்கை, மனக்கொதிப்பு ஆகியவைகளையும் எடுத்துக் காட்டுவது குற்றமாகுமா?

சென்னை முதலமைச்சரின் வர்ணாசிரம கல்வித் திட்டத்தை வன்மையாகக் கண்டித்தும், எதிர்த்தும் வருகின்றேன் என்றால், இதனால் தனிப்பட்ட பார்ப்பனர்மீது எனக்கு விரோதம், துவேஷம் என்பது அர்த்தமல்ல. பார்ப்பனீயக் கொடுமைகளான மூடப்பழக்க வழக்கங்கள், மக்களது சமுதாயத்திலிருந்து அகற்றப்பட்டு, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற மனிதாபிமானத்துடன், அனைவரும் வாழவேண்டும் என்பதேயாகும். இக்கொள்கையைத்தான் — தூய கருத்தைத்தான் பெரியபெரிய ஞானிகளும், புத்தர், ராமலிங்கர், ஏன், காந்தியடிகளும்கூட, அவர்களது வாழ்நாட்களில் எடுத்துரைத்தார்கள். அதற்காகவே பெரும் பணியாற்றினார்கள்.

அதே கொள்கையைத்தான், சமுதாயத்தைப் பொறுத்தமட்டில், திராவிட முன்னேற்றக் கழகமும் கொண்டிருக்கிறதேயன்றி, தனிப்பட்ட எந்த நபர்மீதோ, ஜாதியின் மீதோ துவேஷம் கொள்வதல்ல என்பதை கனம் நீதிபதி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, அரசியல் துறையிலும் தென்னாடு—'திராவிடம்' வடநாட்டு ஆதிக்கத்திற்கும் பொருளாதார வேட்டைக்கும் பலியாகாமல், சுதந்திர நாடாய்த் திகழவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டு பணியாற்றி வருகிறது. தி. மு. கழகம்.

குறிப்பாக, சென்னை முதலமைச்சரின் கல்வித் திட்டமானது, பார்ப்பனீயத்துக்கும், வர்ணாஸ்ரம ஆதிக்கத்திற்கும் வலுவூட்டுவனதாக இருப்பதோடு, அத்திட்டத்தைக் கூட எதேச்சாதிகாரமாக முதலமைச்சர் திணித்திருப்பதால், ஜனநாயகம் நாட்டிலே நிலைபெறவேண்டும் என்ற தூய எண்ணத்துடன் இந்நாட்டின் பிரஜை என்ற முறையிலே, யான், அத்திட்டத்தை எதிர்க்க முனைந்தது குற்றமாகுமா?

சென்னை முதலமைச்சர் கல்வித் திட்டம், இந்தியப் பிரதமரின் வகைமொழிகள், தமிழகத்தின் தன்மானத்தை சிதைவுறச் செய்யும் வகையில், கல்லக்குடி என்னும் பெயரை, வடநாட்டு முதலாளித்துவ அதிபரான டால்மியா என்பவர் பெயரால் மாற்றப்பட்டிருப்பதை நீக்கி, மீண்டும், கல்லக்குடி என்னும் பெயரே இடப்படவேண்டும் என்ற திட்டங்கள் கொண்ட தி. மு. கழகத்தின் அறப்போர் வெற்றியுற, தி. மு. கழக செயற்குழு உறுப்பினன் என்ற உரிமையில், அதன் தீர்மானங்களை முழுமனதுடன் ஆதரிக்கவும், செயல்முறையில் நிறைவேற்றவும் உறுதி கொண்டது குற்றமாகுமா?

ஆகவே, இப்பெரும நோக்குடன் இயங்கிவரும் திராவிட முன்னேற்றக்கழகத்தின் செயற்குழு உறுப்பினன் என்ற உரிமையிலே, அதன் சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் ஆகியவைகளில், அக்கருத்துக்களைப் பற்றி சொற்பொழிவு ஆற்றியிருப்பதும், அறப்போர் வெற்றியுற, பொதுமக்களை வேண்டிக்கொள்வதும் குற்றமாகுமா?

திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திவரும் அறப்போர்கள் அனைத்தும் அமைதியையும், கண்ணியத்தையும் அடிப்படையாகக் கொண்டவை என்பதை அரசியலாரே அறிவர். பலாத்கார எண்ணமோ, செயலோ, எனக்கும், யான் ஈடுபட்டுள்ள கட்சிக்கும் — அதாவது, தி. மு. கழகத்துக்கும். உடன்பாடல்ல, என்பதை மீண்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, திராவிட முன்னேற்றக்கழக செயற்குழு உறுப்பினன் என்ற முறையில் கழகத் திட்டங்களில் கலந்து கொள்ள முனைவதும், அல்லது சொற்பொழிவுகள் ஆற்றியிருப்பதும், யான், ஆசிரியராக இருந்து நடத்திவரும் 'திராவிடன்' வார இதழில் அக்கருத்துக்களை பரப்புவதும் குற்றமாகுமா?

ஆதலினாலே, சர்க்கார் என்மீது சாட்டியுள்ள குற்றங்களுக்கு ஏற்ப, யான் குற்றவாளி அல்ல என்பதை, கனம் நீதிபதி அவர்களுக்கு பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருக்கால், கோர்ட்டார் அவர்கள், என்னைக் குற்றவாளி எனத் தீர்ப்புக் கூறி தண்டித்தால், எனது தாய் நாடாம், திராவிடத்தின் விடுதலைக்காகவும், திராவிட சமுதாயத்தினராகிய ஏழை பாட்டாளி மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்காகவும், அறப்போரின் வெற்றிக்காகவும் தண்டனையை ஏற்கத் தயங்கேன்.

வாழ்க திராவிடம்! வாழ்க தமிழ்மொழி!

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at 'Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.